உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ ஆண்டு மார்கழித்திங்கள் 10—1—67 [இதழ

தான்யலக்ஷ்மி

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

ஈசன் அடியில்
இருக்கையிலே எங்கெங்கும்
ஈசனடி தேடி
இளைத்தேனே — பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப்
பொற்பாதன் றன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன்
நான். (48)

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26	10-1-67	இதழ் 2

உட்பொருள்

எண்		பக்கம்
1	தைப்பொங்கல் மலர்ந்தது!	65
2	ஆடும் பெருமான்	67
3	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ...	74
4	ஆருளாசியுரை ...	81
5	அப்பர் அருள் முரசு ...	86
6	'அமுதிற்குத் தமிழென்று பேர்' ...	92
7	திருவிழா ...	96
8	ஆறும் நூறும் ...	99
9	தையல்நாயகி அந்தாதி	101
10	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் தலவழிபாடு ...	105
11	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை ...	109
12	செய்திகள் ...	114
13	எதிர்காலம் ...	118
14	Extract from the Visitor's Book 80, 95, 98, 104, 108, 113	

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ - மார்கழி - 10—1—67 [இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

ஆடும் பெருமான்

சிவபெருமான் திருவடிவங்களுள் நடனம் ஆடும் திருவடிவம் முதன்மையானதோன்று. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்கின்றபடி, இறைவன் அசைத்தால் அன்றி யாதோன்றும் அசையாது, செயலற்றே கிடப்பதாகும். இறைவன் உலகத்தை அசைத்தால்மட்டும் போதாது; தானே அசையவும் வேண்டும். அவ்வாறு, தானும் அசைந்து, உலகத்தையும் அசைக்கும் அவனது செயலைக் காட்டும் திருவடிவமே நடராச மூர்த்தம். நடராச மூர்த்தியை, 'நிருத்த மூர்த்தி, தாண்டவேசுரர், கூத்தப்பிரான்' முதலிய பல திருப் பெயர்களால் அடியவர் குறிப்பிடுவர்.

தைப்பொங்கல் மலர்ந்தது!

—: வேலன் :—

மனமெலாம் மலர்ச்சி பொங்க,
　　மழையெலாம் இடித்துப் பொங்க,
இனமெலாம் இனிது வாழ,
　　இசையெலாம் கிளர்ந் திசைக்க,
முனமெலாம் நிறைந்த பண்பு
　　முழுமையாய்ப் பாரில் ஓங்கத்
தனமெலாம் பெருக நாட்டில்
　　தைப்பொங்கல் மலர்ந்த தின்றே. (1)

பனிபடர் பொழுது நீங்கிப்
　　பகலவன் கதிராங் கையால்
துனியெலாம் போக்கி, வையத்
　　தோகையைத் தழுவி, எங்கும்
நனிவளம் பெருக நெல்லும்
　　நயப்புறுங் கரும்பும் ஓங்கத்
தனிநிலை காணும் திங்கள்
　　தைத்திங்கள் ஒன்றே யன்றோ? (2)

பூமகள் சிரிப்புப் பொங்கிப்
　　பொலிவுற வந்த இந்நாள்,
நாமகள் அடிகள் போற்றும்
　　ஞானப்பூஞ் செல்வ ரெல்லாம்
கோமகள் அன்னை பாதம்
　　குறிப்புணர்ந் தேத்தல் செய்வார்!
பாமகள் நகைத்து நிற்பாள்!
　　பாரெலாம் தழைக நன்றே! (3)

வாழ்வினில் தேவை மிஞ்சி
வறுமையால் வாடு வோர்க்கும்,
தாழ்விலாச் செல்வம் வாய்த்துத்
தழைத்திடும் மாந்தர் கட்கும்
சூழ்வினைத் துறைகள் முற்றிச்
சுடர்விடும் கலைஞர் கட்கும்
ஆழ்கடல் போல் மகிழ்ச்சி
அலையெழ வந்த பொங்கல். (4)

அன்பினை உலையாய் வைத்து
அருளினை அரிசி யாக்கி
முன்புறும் முயற்சி என்னும்
முழுக்குடம் அடுப்பில் ஏற்றி,
தென்புறும் பண்புச் சோற்றைத்
திருநாளிற் படையல் செய்வோம்;
அன்பரும் பிறரும் கூடி
அகமகிழ் வெய்தி ஆர்ப்போம்! (5)

இறைநிலை பற்றி மாந்தர்
இன்புற, கீழ்மை மாய்ந்து,
துறைதொறும் விழுப்பம் ஓங்க,
தூய்மையே பெருக, நாட்டில்
கறையிலா அன்புப் பாதைக்
கால்கொள வந்த பொங்கல்
இறைவனார் பரிசு என்போம்;
எழிற்பொங்கல் வாழ்க என்போம்! (6)

அளவில் அடங்காத உலகம் அனைத்தினையும் ஆக்கிக் காத்து அழித்து நடத்தும் செயல் இறைவனுக்கு ஒரு விளையாட்டாய், அவனது சங்கற்ப மாத்திரையால் நடைபெறுகின்றது என்பது, "நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன், இவ்வானும் குவலயமும் எல்லோமும் — காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்னும் திருவாசகத்தால் உணர்கின்றோம். விளையாட்டுக்களில் கூத்து அல்லது நடனம் ஒரு சிறந்த செயலாதலின், உலகத்தைக் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் பெருமான் கூத்தாடுங் குணமுடையவனாய்க் காணப்படுதல் இயல்பே.

அகத்தால் பற்றாது புறத்தால் மட்டும் மேற்கொண்டு செய்யும் செயல்கள், 'நடித்தல்' எனப்படும். அனைத்துலகத்தையும் ஆக்கிக் காத்து அழித்து நடாத்தினாலும் இறைவன் அவற்றில் சிறிதும் பந்தப்படாது, தன் இயல்பில் திரிபின்றியே நிற்பன். அதனால், அச்செயல்கள் அனைத்தையும் அவனது நடிப்பு என்று உண்மை நூல்கள் கூறும்.

> *"ஐந்து நலமிகு தொழில்களோடும்*
> *நாடகம் நடிப்பன் நாதன்"*

என்பது சிவஞானசித்தி.

நடனம் ஆடுவோரும், நாடகம் நடிப்போரும் புகழ், பொருள், பொழுது போக்கு முதலிய பயன் கருதி நடிப்பர். இறைவன் அவ்வாறின்றி, உயிர்கட்கு நலஞ்செய்தல் வேண்டும் என்னும் அருள்காரணமாகச்செய்தலின், அவனது நாடகம் அருள் நாடகமாகும். இதனை,

> *"ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்*
> *பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்*
> *கேடும் பிறப்பும் அறுக்குமெனக் கேட்டீராகில்*
> *நாடுந் திறத்தார்க்கு அருளல்லது நாட்ட லாமே"*

என்று விளக்கியருளுகின்றார் ஞானசம்பந்தர். எனவே, அருள்நாடகம் ஆடும் பெருமான், நடிக்கும் பெருமானாய் விளங்குதல் பொருந்துவதேயாம். இவற்றாலெல்லாம் கூத்துடைத் திருவடிவத்தினது முதன்மை இனிது பெறப்படும்.

அருளாசிரியர்கள் இத் திருவுருவத்தில் ஈடுபட்டு அருளிச் செய்த திருப்பாடல்கள் நம் உள்ளத்தை உருக்குவன.

" ஆறுடு சடைமுடியன் ; அனலாடு மலர்க்கையன் ;
இமயப் பாவை
கூறுடு திருவுருவன் ; கூத்தாடுங் குணமுடையோன்
குளிருங் கோயில் "

என்று வகுத்தருளிச்செய்கின்றார் ஆளுடைய பிள்ளையார்.

" குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே "

என்றும்,

" முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும்
முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்தவெண் ணீறும்
சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலும்என்
பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன்
குரைகழலே "

என்றும் வரும் அப்பர் திருப்பாடல்களை அறியாதார் யாவர்! இன்னும் அவரது, " பாளையுடைக் கமுகோங்கி " என்னும் திருப்பதிகம் கூத்தப் பெருமானது திருவடிவத்தைப் பாதாதி கேசமாகத் திளைத்து அருளிச்செய்தது என்பதும் பலரும் அறிந்ததே.

இறைவன் உலகத்தை நடத்தும் செயல்கள் பலவும், 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தாய் அடங்குதலால், அவற்றைத் தெரிவிக்கும் திருநடனமும், 'பஞ்ச கிருத்திய நடனம் - ஐந்தொழிற்

கூத்து' எனப்படுகின்றது. இவ்வைந்தொழிலையும் பெருமாைது கூத்துடைக் கோலம் உணர்த்தி நிற்றலை,

> " தோற்றம் துடியதனில்; தோயும் திதிஅமைப்பில்;
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்; — ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம்; முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே; நாடு"

என்னும் உண்மை விளக்க வெண்பா உணர்த்துகின்றது. இது பெத்தான்மாக்கள் பொருட்டுச் செய்கின்ற ஊன நடனம் முத்தான்மாக்கள் பொருட்டுச் செய்கின்ற ஞான நடனத்தையும்,

> " மாயை தனை உதறி, வல்வினையைச் சுட்டுமலம்
> சாய அமுக்கி, அருள்தானெடுத்து, — நேயமா
> ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
> தானெந்தை யார்பரதந் தான்"

என்று அந்நூல் விளக்குகின்றது

நடனம் ஆடுவது அம்பலத்தில் - சபையிலாதலின், கூத்தப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் இடம் அம்பலம் - சபை என்றே சொல்லப்படும். அவன் உலகத்தை இயக்குவது சத்தியை இடமாகக் கொண்டே யாதலின், அவனுக்கு உண்மையில் இடமாவது, 'பரவெளி' எனப்படும் ஞானுகாசமேயாம். அதனுல், அப்பெருமான் இங்கு எழுந்தருளி இருக்கும் இடமும், 'ஞானுகாசம் - சிதம்பரம்' என்றே கொள்ளப்படும். எனினும் அப்பெயர், கூத்தப் பெருமானுக்குச் சிறந்த தலமாகிய தில்லையின்கண் உள்ள அம்பலத்திற்கே சிறப்புவகையில் அமைந்துள்ளது.

சிவபெருமான் திருக்கோயில்கொண்டுள்ள தலங்களிலெல்லாம் அம்பலம் - சபை அமைந்துள்ளதாயினும், ஐந்து தலங்களில் உள்ள அம்பலங்களே, 'பஞ்ச சபை' என்று சிறப்பாகக் குறிக்கப்படும். அவற்றுள் முதலாவது தில்லையம்பலம்; இது, பொன்னம்பலம் - கனக சபை. அடுத்தது மதுரையில் உள்ள வெள்ளியம்பலம் - இரசத சபை. திருவாலங்காட்டில் உள்ளது, மணியம்பலம் - இரத்தின சபை.

இதனை எல்லாவற்றினும் பழைமை யுடையதாகக் கூறுதல் உண்டு. திருநெல்வேலியில் செப்பம்பலம் - தாமிர சபை உள்ளது. திருக்குற்றாலத்தில் உள்ள அம்பலம் ஓவிய அம்பலம் - சித்திர சபை.

" ஒன்றுதோ ருடலை ஒருவி ஆவிமெய்
துன்றுதோ ருடலைத் தொடங்கி ஐவகை
மன்றுதோ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதோ ருடிய குமரற் போற்றுவாம்"

என்று, இவ்வைவகை அம்பலங்களைக் கந்தபுராண ஆசிரியர் குறிப்பிடுதல் காணலாம்.

இறைவன் செய்யும் நடனத்தை, 'பஞ்ச கிருத்திய நடனம்' என்பதோடு, 'ஆனந்தத் தாண்டவம், அனவரத தாண்டவம், சதாநிருத்த தாண்டவம்' முதலாகப் பிற பெயர் களாலும் கூறுவர். இன்னும் 'ஊர்த்துவ தாண்டவம், சண்ட தாண்டவம்' முதலாக, நடனத்தின் வேறுபாடுபற்றி வேறு வேறு பெயர்களாலும் குறிப்பிடுவர். 'பஞ்ச கிருத்திய நடனம்' என்பதே தில்லையம்பலம் முதலிய பல இடங்களி லும் காணப்படும் திருநடனம். திருஆலங்காட்டில் விளங்கு வது 'ஊர்த் துவதாண்டவம்' என்றும், 'சண்டதாண்டவம்' என்றும் சொல்லப்படும். வெள்ளியம்பலத்தில் உள்ளது கால் மாறி யாடிய திருக்கோலம். மற்றும் பல வேறுபட்ட நடனங் களும் உண்டு.

தில்லையம்பலத் திருநடனத்தை, 'இறைவன், திருநடங் காணவேண்டித் தவம் பல புரிந்த பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் இரு முனிவர்கள் பொருட்டுத் தைமாதமும், குருவாரமும் கூடிய சித்த யோக நாளிலே புயங்க நடனத் தைச் செய்து காட்டிப் பின் அவர்களது வேண்டுகோளின் படியே அனவரத தாண்டவம் செய்தருளுகின்றான்' என்று கோயிற் புராணம் கூறும். "பதஞ்சலிக் கருளிய பரம நாடக" என்பது திருவாசகம்.

'மதுரையில் தடாதகைப் பிராட்டியார் திருமணத்திற்கு வந்த அம் முனிவர் இருவரும் தங்கள் நியமங் கெடாதவாறு

காணுதற்பொருட்டு வெள்ளியம்பலத்தில் சிவபெருமான் நடனம் செய்தருளினர்' என்றும், 'பின்பு பாண்டியன் ஒருவனது வேண்டுகோளின்படி கால்மாறி ஆடினர்' என்றும் திருவிளையாடற் புராணம் கூறும். மதுரை நடனத்தை, 'சொக்க நடனம்' என்று பழைய திருவிளையாடல் குறிப்பிடும்.

திருவாலங்காட்டில், 'முஞ்சிகேசர், கார்க்கோடகர்' என்னும் இரு முனிவர் பொருட்டாகச் செய்யப்பட்டது ஊர்த்துவ தாண்டவம் என்பது திருவாலங்காட்டுப் புராணங் கூறுவது.

திருநெல்வேலியில் உமையம்மை பொருட்டும், திருக்குற்ருலத்தில், மால், அயன், அகத்தியர், வாசுகி என்பவர் பொருட்டும் பெருமான் நடனம் செய்தருளினமை அவ்வத் தல புராணங்களில் கூறப்படுகின்றன. காஞ்சிப் புராணம் முதலியவற்றிலும் இறைவன் நடம் புரிந்த வரலாறுகள் உள்ளன.

இங்ஙனம் பல தலங்களில் பலவகை நடன வடிவத்தில் எழுந்தருளியிருந்து சிவபெருமான் தன் அடியார்கட்கு அருள் வழங்கினும், அப்பெருமான் பல்வேறு நடனங்களைப் பல்வேறு காலங்களில் செய்தருளிய வரலாறுகளைப் புராணங்கள் கூறும்.

'சிவபெருமான் தேவர்கள் பொருட்டு ஏகாதசி திதியில் நஞ்சுண்டு, அதற்கு ஒன்று இடையிட்டு வந்த திரயோதசி திதியில் மாலைப்பொழுதாகிய பிரதோட காலத்தில் தேவர்கள் களிக்க ஓர்யாம காலம் நடனம் செய்தருளினர்' என்பது 'சந்தியா நிருத்தம்' என்பது பற்றிய வரலாறு.

'சும்பன், நிசும்பன்' என்னும் அசுரர் இருவரை உமாதேவியார் அழித்தமையை அறிந்து அவர்கட்காகப் பரிந்து போருக்கு வந்த 'இரத்த பீசன்' என்பவனையும் அவர் அழித்த காலத்தில், அவன் முன்பு பெற்ற வரத்தின்படி அவனது இரத்தம் நிலத்தில் விழின் அவனைப்போலப் பல அசுரர்கள் தோன்றுவராதலின், அஃது ஒரு துளியேனும் விழாதபடி கபாலத்தில் ஏற்றுக் குடித்த காளி, அதனல்

கோளைட செருக்கினைச் சிவபெருமான் நிருத்தப் போர் செய்து அடக்கினார்' என்பது, 'சண்ட தாண்டவம்' என்றும், ஊர்த்துவ தாண்டவம்' என்றும் சொல்லப்படும் நடனம் பற்றிய வரலாறு இந்நடனமே திருவாலங்காட்டிற் காணப்படுவது.

'தாருகாவனத்து முனிவர்கள் தம் வேள்வியில் உண்டாக்கி ஏவிய முயலகன் என்னும் அசுரனை ஒரு திருவடியால் மிதித்து, பாம்புகளைப் பல்வகை அணிகலங்களாக அணிந்து சிவபெருமான் அவர்கள் முன் நடனம் செய்தருளினார்' என்பது, 'புயங்க நடனம்' என்பது பற்றிய வரலாறு.

இவற்றால் எல்லாம் பல்வகை நடனங்களுக்கும் முதல்வராய் உள்ளவர் சிவபெருமானே என்பது விளங்குவதாகும். எல்லா நடனங்களும், உண்மை விளக்கத்திற் கூறியவாறு பெத்த நிலையிலும் முத்திநிலையிலும் உள்ள ஆன்மாக்கள் பொருட்டுச் சத்தியாகிய பரவெளியில் நின்று, திருவைந்தெழுத்தையே திருமேனியாகக்கொண்டு செய்தருளும் பஞ்ச கிருத்திய தாண்டவத்தின் பகுதியாகவே அமையும். ஆதலின் அதனை மேற்கொண்டருளும் கூத்தப் பெருமானது திருவடிவத்தை வழிபடுகின்றவர், 'போகம், மோட்சம்' என்னும் இரு பயன்களையும் பெற்று இன்புறுதல் திண்ணம் "நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே" என்று ஞான சம்பந்தரும் திருநடனத்தை நினைப்பதை நியமமாகக் கொள்ளுதல் வேண்டும் என்று அருளுகின்றார்.

கூத்தப்பெருமான் திருக்காட்சி வழங்கும் சிறந்தநாள் திருவாதிரைத் திருநாள். அஃது அண்மையில் வந்து அளித்த பயன் அன்பர்கள் உள்ளத்தில் அகலாது நிற்பதாம். திருவாதிரைத் திருநாள் தில்லையிற்போலத் திருவாலங்காட்டிலும் சிறக்க நிகழ்வது. திருவாலங்காட்டுத் திருநடனத்தைத் தரிசித்து மகிழ்ந்து பாடியவர் காரைக்காலம்மையார் அவரது திருப்பதிகமும், பிற பிரபந்தங்களும் அண்மையில் தருமையாதீனத்தில் வெளியிடப்பெற்றதும் அன்பர்கள் அறிந்தது. அளவிலா ஆன்மாக்கட்கு அளவிலா ஆனந்தத்தை வழங்கும் ஆடும் பெருமானது அருட்டிருவடிவினை அனைவரும் அகத்தும் புறத்தும் அன்பினால் வழிபட்டு அருள்பெறுவோமாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

பொருள் வணக்கம்

நித்தியமாய், நின்மலமாய், நிட்களமாய், நிராமயமாய்,
நிறைவாய், நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய், சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய், எல்லாம்
வைத்திருந்த தாரகமாய், ஆனந்த மயமாகி,
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றஒன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.

—தாயுமானவர்.

மக்கள் எண்ணும் எண்ணங்களும், சொல்லும் சொற்களும், செய்யும் செயல்களும் எல்லாம் பயனுடையனவாய் இருத்தல் வேண்டும். பயனில்லாத எண்ணங்களை எண்ணுதலும், பயனில்லாத சொற்களைப் பேசுதலும், பயனில்லாத செயல்களைச் செய்தலும் அறிவுடைமைக்குப் பொருந்துவன அல்ல என்பது அனைவரும் அறிந்தது. இனிச் சில பயன்களைக் கருதி முயலும் பொழுது அப்பயன் நிலைத்த பயனாய் இருத்தல் வேண்டும் என விரும்புதலும் இயற்கையே. பெரிய பயனாய் இருப்பினும் அப்பொழுது கிடைத்துப் பின் நிலையில்லாமற் போய்விடுமாயின் அதைவிட என்றும் நிலையாய் இருக்கும் சிறியபயனே சிறந்தது என்று எண்ணும் எண்ணம் மக்களிடையே எழுதல் இயற்கை. எடுத்துக்காட்டாக, பணியாள் ஒருவன் தனக்குக் கிடைக்கும் பணி மிக்க ஊதியம் தருவதாயினும், அது சில நாட்களே இருந்து

நீங்குவதாயின் அதனைவிட, சிறிது குறைந்த ஊதியம் தருவதாயினும் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்கும் பணியே சிறந்தது எனக் கருதுவதை நினைவு கூரலாம்.

உலகியலில் இது எங்கும் இயற்கையாய்க் காணப்படுகின்றது. ஆனால், ஆன்மீகத்துறையில் இதற்கு நேர்மாறான நிலை காணப்படுவது வியப்பினும் வியப்பே. அஃதாவது உடல் நலத்திற்கு உணவு, உடை முதலாகக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அடையும் பயன்கள் வேண்டுவனவே. ஆயினும், அவை உயிருக்கு நலம் தருவனஆகா. ஏனெனில், உயிர், உடல்போலத் தோன்றி மறைவதன்று; அஃது என்றும் உள்ளது. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று உணரும் பொருள்கள் யாவும் தோன்றி மறைவன. அதனால், அவை தம்மைப்போலத் தோன்றி மறையும் உடலுக்கு உதவியாகுமேயன்றி, என்றும் உள்ள பொருளாகிய உயிருக்கு உதவியாவன அல்ல. எனினும், நிலைத்த பொருளாகிய உயிர், நிலையில்லாத பொருளாகிய உடம்பொடு கூடியிருப்பதால், அவ்வுடம்பின் வழியாக வரும் நிலையற்ற இன்பத்தை விரும்புகின்றது. அவ்வாறு விரும்புவதில் குற்றம் ஒன்றும் இல்லை. ஆனால், 'அந்த நிலையற்ற இன்பந்தான் இன்பம்' என்று கருதி, நிலைத்த இன்பத்தை மறந்து விடுவதுதான் குற்றமாகின்றது. உலகியலில் நிலைத்த பயனையே விரும்புகின்ற மக்கள் ஆன்மீகத்துறையில் நிலைத்த பயனைப்பற்றிச் சிந்தியாமல் விட்டுவிடுவது ஏனோ?

உலகியலில் நின்று பார்க்கும்போது விரும்பத் தக்கனவாய்க் காணப்படும் பொருள்கள்யாவும், ஆன்மீகத் துறையில் நின்று பார்க்கும்பொழுது விரும்பத்தகாதனவாய்விடும். எனவே, அத்தன்மையான பொருள்களை விரும்புதல் அப்பொழுது இன்பம் போலத் தோன்றினும் பின் துன்பமேயாகும். அத்துன்பம் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து வருந்தும் துன்பமே என்பது,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு"

என்னும் திருக்குறளில் இனிது விளக்கப் படுகின்றது.

பொருளல்லன, நிலையற்றவை. இதனை 'பொய்ப்பொருள்' என்பர், பொருள், நிலையுடையது. இதனை 'மெய்ப்பொருள்' என்

பார்கள்-பொய்ப்பொருளை மெய்ப்பொருள் எனக் கருதி விரும்பு வதை 'மருள்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதைக் காண்கின் றோம். மருள் - மயக்கம், அஞ்ஞானம். இம்மயக்கத்திற்குக் காரணம் ஆணவமலமே. இஃது உள்ளவரையில் உயிருக்கு மெய்ப் பொருள் மெய்ப்பொருளாய்த் தோன்றாது. பொய்ப்பொருள் தான் மெய்ப்பொருளாய்த் தோன்றும். ஆணவமலம் காரணமாக மெய்ப்பொருளை உயிர் விரும்பாதிருப்பதற்கு உமாபதி சிவாசாரியார் ஓர் உபமானம் கூறுகின்றார்.

"தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்
பித்தத்தில் தான்தவிர்ந்த பின்"

என்பதே அவ்வுபமானம். பால் இனிப்புடைய ஒரு பொருளே. ஆயினும், அதைப் பருகுபவனுடைய நாக்குப் பித்தத்தில் வீழ்ந் திருக்குமாயின், அது வேம்புபோலக் கசக்கத்தான் செய்யும். அந்நாக்குப் பித்தத்திலிருந்து நீங்கிவிடுமாயின், பின்பு பால் பாலாகவே தித்திக்கும். அதுபோல மெய்ப்பொருள் தான் இன்பப் பொருள் : ஆயினும், உயிரினது அறிவு ஆணவமலத்தில் வீழ்ந்து கிடப்பதால், அஃது அவ்வறிவிற்கு இன்பமில்லாத பொருள்போலத் தோன்றுகின்றது. ஆணவமலம் நீங்கிவிடுமா யின், பின்பு அவ்வறிவிற்கு மெய்ப்பொருள் இன்பமுடையதாய் இனிக்கும். அப்பொழுது அதனை நினைத்து,

"நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் னமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

என்று ஏங்கும் நிலை உண்டாகும். இந்நிலை உண்டாகப்பெற்ற பெருமக்கள் நம் நாட்டிற் பலர். அவர்கள் மெய்ந்நெறியில் நின்று மெய்ப்பொருளை அடைந்து இன்புற்றதோடு, நமக்கும் அம்மெய்ப்பொருளின் உயர்ந்த நிலையை அறிவுறுத்தியருளிய வர்கள். அவர்களில் தாயுமான அடிகள் அம்மெய்ப்பொருளின் தன்மையை மிக விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக்கூறி வணங்கும் பகுதியின் முதல் திருப்பாடலே மேல்தரப்பட்டது. அதில், 'நித்தியமாய்' என்பதையே அவர் முதற்கண் கூறுகின் றார். எனவே, நித்தியமான - என்றும் ஒரு தன்மையாய் உள்ள

பொருளே, ‘பொருள்’ எனப்படுவதாகும் என்பதும், அதனையே அவர் வணங்குகின்ருர் என்பதும் விளங்குகின்றன.

“அநித்தியத்தை நித்தியம்என் ருதரிக்கும் பொல்லா மனித்தர்”

என்பதில், பொய்ப்பொருளை மெய்ப்பொருள் என்று கருதி அதனையே அடைய விரும்புகின்றவர்களை, ‘பொல்லா மனிதர்’ என்றுகூட எங்கள் ஆதிபரமாசாரிய சுவாமிகள் அருளுவதைக் காண்கின்ருேம்.

என்றும் அழியாது இருப்பதால், ‘நித்தியப் பொருள்’ அல்லது ‘மெய்ப்பொருள்’ என்றும், எல்லாப் பொருட்கும் மேலாய் இருத்தலால், ‘பரம் பொருள்’ என்றும் சொல்லப்படுகின்றவன் இறைவனே. இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களில் ‘இறையே மேலான பொருள்’ என்பதைச் சிவப்பிரகாசம் என்னும் நூல், “பதி பரமே” எனக் குறிப்பிடுகின்றது. “பதி பரமே” என்பதற்கு, ‘பதியே மேலானது’ என்பது பொருள். ‘பதி ஒன்றே பரம் பொருள்’ என்பதனுல், ‘அதனை அடைவதே மேலான பயன்’ என்பதும், ‘ஏனைய பயன்கள் எல்லாம் அதற்குக் கீழ்ப்பட்ட பயன்களே’ என்பதும் விளங்கும். அதனுல் எனைய பொருள்களின் தன்மையைப் பலவகையாக நினைத்து நினைத்து ஏங்குவதை விடுத்து, இறைவனது தன்மைகளையும் பலவகையாக நினைத்து இன்புறுதலே செய்யத்தக்கதாகும். இவ்வாற்ருல் இறைவனைத் துதியாது, மக்கள்பால் சென்று அவர்களிடத்து இல்லாதவைகளையும் சொல்லிப் புகழ்ந்து துன்புறுபவர்க்கு அறிவுறுத்தும் முறையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூரில் ஒரு திருப்பதிகம் அருளிச்செய்திருத்தல் யாவரும் அறிந்தது.

“மிடுக்கி லாதானை வீம னேவிறல்
விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று
கூறி னும்கொடுப் பாரிலை;
பொடிக்கொள் மேனிஎம் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேலம ருலக மாள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே”

இவ்வாறு மனிதர்களை, இல்லாதவற்றையும் சொல்லிப் புகழ்கின்றவர்கள், அளவின்றிக் கிடக்கும் இறைவனது புகழில் சில வற்றையேனும் சொல்லி அவனைத் துதியாதது என்னே என்பது சுந்தரரது திருவுள்ளம். பட்டினத்தடிகள் வேறொன்றைக் கூறுகின்றார்; சிலர் பெண்களைப் பலவாறு புனைந்துரைத்து, இறைவனைப் பற்றி ஒரு சொல்லேனும் சொல்லாமற் காலங்கழிக்கின்றனர் என்பதே அவர் கூறுவது.

"நெறிதரு குழலை அறலென்பர்கள்;
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்;
நிலவினும் வெளிது நகையென்பர்கள்;
நிலம்வரு கலசம் நகிலென்பர்கள்;

அறிகுவ தரிதிவ் விடையென்பர்கள்;
அடியிணை கமல மலரென்பர்கள்;
அவயவம் இனைய மடமங்கையர்;
அழகியர் அமையும் அவரென்செய!

மறிமழு வுடைய கரன்என்கிலர்;
மறலியை முனியும் அரன்என்கிலர்;
மதிபொதி சடில தரன்என்கிலர்;
மலைமகள் மருவு புயன் என்கிலர்;

செறிபொழி நிலவு தி(ல்)லை என்கிலர்;
திருநடம் நவிலும் இறைஎன்கிலர்;
சிவகதி அருளும் அரசென்கிலர்;
சிலர்நர குறுவர் அறிவின்றியே"

என்பது அவ்வாக்கு. இவ்வாறு செல்வர்களையும், பெண்களையும் புகழ்ந்து இறைவனைத் துதியாது போகின்றவர்களே, அநித்தியத்தை நித்தியம் என்று ஆதரிக்கும் பொல்லா மனித்தர். அவர்களது முறையை அறவே கைவிட்டவராகிய தாயுமானவர், 'நித்தியமாய், நின்மலமாய், நிட்களமாய்' என்பது முதலாக உள்ள இறைவனது அருட் குணங்களில் ஈடுபட்டு, அவற்றை எடுத்தோதி மகிழ்கின்றார்.

அநித்தியமாய் உள்ள மாயாகாரியங்கள் தாமே மலமாயும், ஆணவ கன்மங்களாகிய மலங்களோடு பொருந்தியனவாயும் இருக்கும். நித்தியனாகிய இறைவன் அவற்றோடு சிறிதும் தொடர்பில்லாதவன் ஆதலின், நின்மலனாகின்றான். அநித்தியம்

தூலப் பொருளாதலின், அவை உருவமாயும் தோன்றும் நித்தியனான இறைவன் சூக்குமப் பொருளாதலின், அவன் உருவம் அற்ற நிட்களன். மலதுன்பம் தருவது மலமாகலின், நின்மலனாகிய இறைவன் துன்பத்தோடு தொடர்பில்லாத நிராமயனாவன்.

இன்னும் அவன் எங்கும் நிறைந்த பரிபூரணன்; உயிர்கள் பொருட்டு எல்லாவற்றிலும் தான் நிறைந்திருப்பினும், அவற்றால் மாசுபடாதவன். ஞானத்தை அடையாதவர்கட்கு மிகவும் தூரத்திலேயும் ஞானத்தை அடைந்தவர்க்கு மிகவும் சமீபத்திலேயும் இருப்பவன். 'துரியம்' எனப்படும் நாலாம் நிலையில் அவனை அனுபவமாகக் காணமுடியும். அங்கு அவன் ஒளிவிட்டு விளங்குவான். அவனே எல்லாப் பொருட்கும் தாரகம். இவ்வாறெல்லாம் இருப்பதால் ஆனந்தமே அவனுக்கு உருவாகின்றது. ஆனந்தம் அறிவின் இயற்கை. அறிவு, கண்ணுக்கேயன்றி வாக்குற்கும், மனத்திற்கும் எட்டாது. உயிர் தூல அறிவாதலின், அஃதாயினும் வாக்கிற்கும், மனத்திற்கும் ஒருவாறு அகப்படும். இறைவன் சூக்கும அறிவாதலின், அவன் ஒருவாற்றானும் வாக்கு மனங்களுக்கெட்டாத சித்துருவானவன். முப்பத்தாறு தத்துவங்களையும் அறவே விடுத்துச்சென்றால், ஒன்றும் அற்ற சூனியம்போல முதலில் தோன்றுவான்; அந்நிலை அருள் வெளியே. அங்கு இன்பம் உதயமாகும். ஆகவே, அவ்வனுபவ நிலை சுகாரம்பப் பெருவெளி அன்றோ! என்று இவ்வாறு அப் பரம்பொருளின் நிலையைப் பலவாறு சிந்தனைசெய்து பாடித் திளைக்கின்றார் தாயுமான அடிகள்.

தொடக்கத்திலே இத்துணை அரிய கருத்துக்களைக் கூறிய அவர், ஏனைய பாடல்களிலும் கூறும் அரும்பொருள்கள் பல. பரம்பொருளாகிய மெய்ப்பொருள், யாதொரு குணமும், குறியும் இல்லாத சித்தாந்தப் பேரொளி; ஐம்பூதங்களுக்குப் பிறப்பிடம்; பேசாத பெரிய மௌன நிலையிலே விளங்குவது; குருவருளால் காட்டவே காணத்தக்கது; அன்பரை அறவிழுங்கிக் கோத்து நிற்கும் இன்பப் பெருவெள்ளம்; யான் எனது என்னும் செருக்கு அற்றவர்களுக்கு, தேனும், பாலும், முக்கனியும், கற்கண்டும் போல் இனிப்பது; சாதி, குலம், பிறப்பு முதலியவை அற்ற தீதில்பொருள்; பூரண ஆனந்தம், வேதத்தின் முடிவில் விளங்குவது; மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும், உடலில் உயிரும்

போல எங்கும் இரண்டறக் கலந்திருப்பது; சாந்த உருவானது; ஆதி அந்தம் இல்லாதது; சமய நெறிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது; 'அ' என்னும் எழுத்து ஏனை எழுத்துக்களாகியும், வேறாகியும் இருப்பதுபோல, எல்லாப் பொருளிலும் ஒன்றாய்க் கலந்திருப்பினும் அவற்றின் வேறாய் நிற்பது; அதனை அடையும் வழியை எனக்கு உபதேசித்த மௌனகுருவின் திருவடிகளை முதற்கண் வணங்கி, அந்தப் பெரும்பொருளையும் வணங்குகின்றேன்' என்று இவ்வாறு ஆரா அன்புடன் அருளிச்செய்யும் அவரது பொருள் வணக்கப்பாடலை ஓதி அதன் பொருளில் தோய்பவர்கள், மெய்ப்பொருளை உணர்ந்து மெய்ப்பயனை அடைபவராவார்கள். அங்ஙனம் ஆதற்குத் திருவருள் துணை நிற்பதாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

"It is indeed a matter of gratification and good fortune to be taken round of this historic ancient temple by the efficient Superintendent and Cashier who are striving their best to maintain the tradition under the kind control, superintendence and guidance of Mahasannidhanam. The staff is devoted and dedicated themselves to the religious cause."

(Sd.) R. Ramakrishna Mudaliar,
25—12—66
Sub Judge, Mayuram.

திருச்சிற்றம்பலம்
குருபாதம்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள்

சென்னையில்

இந்து சமயப் பரப்புநர், விளக்குநர் பயிற்சியாளர்களுக்கு

10—12—66இல் வழங்கிய

அருளாசியுரை

தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல் செய்கைஇடம் ஓவார்
குமிழின் மேனி தந்து கோல நீர்மையது கொண்டார்
கமழுஞ் சோலைக் கானூர் மேய பவள வண்ணரே.

— சம்பந்தர்.

ஆணையர் அவர்களே! துணை ஆணையர் அவர்களே! பயற்சியாளர்களே! மற்றுமுள்ள அன்பர்களே! எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கனின் திருவருளால், சென்னை திருமயிலை இந்து சமயப் பரப்புநர்-விளக்குநர் பயிற்சி நிலையம் நடைபெற்று வரும் இவ்விடத்திற்கு வந்து, உங்கள் அனைவரையும் கண்டு மகிழும் வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்கின்றோம். நமது அன்பிற்குரிய அறநிலைய ஆணையர் திருமிகு. சாரங்கபாணி முதலியார் அவர்கள் தெரிவித்தது போல, தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் சார்பில் நடைபெறும் நிலையில், இந்தப் பயிற்சி நிலையமானது முன்கூட்டியே தொடங்கப் பெற்று வளர்ந்து வருவது கண்டு மிகவும் மகிழ்ச்சியுறுகின்றோம்.

ஏழிசை :

இங்கே எழுந்தருளியுள்ள ஏழு திருமடங்களின் தலைவர்களையும், முதற்கண் வரவேற்றுப் பேசிய திருமதி. சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள் ''ஏழு சுரங்கள்'' என்று குறிப்பிட்டார்கள். அது மிகமிகப் பொருத்தம். இறைவன் இசைவடிவினன்; இசைப் பயனாகத் திகழ்பவன்; இசைக்கு உருகி இன்னருள் புரிபவன். ஆதலின் இறைவனையே 'ஏழிசை' என்று நம்முடைய பெரியோர்கள் கூறுவர்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே"

என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு.

திருஞானசம்பந்தர், மக்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கு உடன்பயக்கும் நற்றமிழ்த் திருப்பதிகங்களை, இன்னிசையோடு கலந்தே அருளிச் செய்தனர். இதனையும் சுந்தரர்,

"நாளும் இன்னிசையாற் றமிழ்பரப்பும்
ஞானசம் பந்தனுக்(கு) உலகவர்முன்
தாளம்ஈந்(து) அவன் பாடலுக்கு
இரங்குந் தன்மையாளனை ...

என அருளிச் செய்கின்றார்.

இந்த நினைவு ஓர் அம்மையார் வாயிலாக நமக்கு வந்ததிலும் ஒரு பொருத்தம் உண்டு! தேவாரத் திருப்பதிகங்களுக்கு, அவற்றுக்குரிய பண்களை வகுத்துக்கொடுத்தவர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழியில் வந்த மதங்க சூளாமணியார் என்னும் ஒரு பெண்மணியே அல்லவா ?

தோத்திரமும் சாத்திரமும் :

இங்குப் பயிற்சிபெறும் பரப்புநரும் விளக்குநரும் ஓதி உணர வேண்டிய உயரிய நூல்கள், பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களும் ஆகும். அவற்றின் சிறப்பைப் பண்டுதொட்டு வழங்கிவரும் ஒரு வெண்பாவால் உளங் கொள்ளலாம் :

"வேதம் பசு ; அதன்பால் மெய்யா கமம் ; நால்வர்
ஓதுந் தமிழ்அதனின் உள்ளுறுநெய் ; — போதமிகு
நெய்யின் உறுசுவையாம், நீள்வெண்ணெ மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்"

என்பது அப்பாட்டு.

மக்களுக்குப் பயன்படும் விலங்குகளுள் தூய்மையும், நன்மையும், கடவுட்டன்மையும் உடையது பசு ; அதுபோல நூல்களுட் சிறப்புடையது வேதம். பசுவினால் கிடைக்கும் பொருள்களுள் மிகச் சிறந்தது அதன் இன்சுவைப்பால் ; பால் மக்களுக்கு

உணவாகவும், மருந்தாகவும், இறைவழிபாட்டின் துணைப்பொருளாகவும், பயன்படும். ஏனைய பொருள்கள் அத்துணைப் பயன் படா. அதுபோல, வேதம் பல கொள்கைகளுக்கும் மூலமாக இருப்பினும் அதன் முடிந்த பயன் சிவநெறியேயாம். வேதம் பொது; சிவாகமம் அருஞ் சிறப்பு. ஆதலினால், 'அதன்பால் மெய் ஆகமம்' எனப்பட்டது 'மெய் ஆகமம் என்றது வேதத்தின் உண்மைக் கருத்தை விளக்கும் திவ்விய ஆகமங்கள் எனப்படும் சைவ ஆகமங்களையே ஆம். "வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத்துறை விளங்க" எனவும்,

"உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய(து) என்பதும்
கலதிவாய் அமணர்காண் கிலார்கள்; ஆயினும்,
பலர்புகழ் தென்னவன் உணரும் பான்மையால்"

எனவும் எழுந்த சேக்கிழார் பெருமான் திருவாக்கு நினைவில் வைக்கத்தக்கது. இன்னும் அப்பெருமான், "சைவத்தை வேதப் பயன்" என அறுதியிட்டுக் கூறியருளுகின்றார். இக் கருத்தைக் கருவாகக் கொண்டுள்ள பெரியபுராணத் திருவிருத்தம் மாணாக்கர்களால் மனனஞ் செய்தற்கு உரியது. அது,

"பண்ணின் பயனும் நல்லிசையும்
பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனுஞ் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ"

எனவரும். இது திருச்சேய்ஞலூரின் சிறப்பைக் கூறுவது.

இதில், 'கருத்தின் பயனும் எழுத்தஞ்சு' என்றதும், 'வேதப் பயனும் சைவம்' என்றதும், சிறப்பாகக் கருதத்தக்கன.

இனி, பாலிலிருந்து கிடைக்கும் பொருள்களுள் மிகச்சிறந்தது நெய்; அது எளிதிற் காணவும் பெறவும் படாமல் பாலின் கண் மறைந்து உறைவது. ஆதலால், அதனை 'உள்உறு நெய்' என்றது அப்பாட்டு. அதுபோல, வேதத்தின் பயனாகவும் உபநிடதப் பொருளின் தெளிவாகவும் உள்ள உயரிய கிரியைகளையும் மெய்யுணர்வையும், சிவாகம ஞானபாதப் பொருளோடு முரணாதபடி, தம்மிடம் விளங்கக் கொண்டுள்ள தமிழ்

மறைகள் தேவார திருவாசகங்களே யாம். ஆதலால், " நால்வர் ஓது தமிழ் அதனின் உள்ளுறு நெய் " என அடுத்துக் கூறிற்று அப்பாட்டு.

நால்வர் ஆவார் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய ஆசிரியர்களே ஆவர். இவர்கள் எல்லோரும் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்றவர்கள்; சிவபரம் பொருளைத் தலைப்பட்டுணர்ந்து சிவமேயாய் நின்றவர்கள்; முதல்வன் அருளாணையால் அற்புதச் செயல்கள் பல புரிந்து சைவ சமயமே மெய்ச்சமயம் என உலகிற்கு விளக்கினவர்கள். " நாலுபேர் போனபடி போ ", " நாலுபேர் சொன்னபடி செய் " என்னும் பழமொழிகள், நாம் இவர்கள் விளக்கிய சரியை, கிரியா யோக ஞான நெறிகளில் நிற்கவேண்டும் என்பதையும், தேவார திருவாசகங்களை ஓதி உணர்தல் வேண்டும் என்பதையும் குறிக்கும்.

இனி, நெய் தன் சுவையால் நம்மை இன்புறுத்துவது; நெய்யும் சுவையும் வேறல்ல ஆயினும், அவை குணியாகவும் குணமாகவும் இருந்து நன்மை பயப்பவை. அதுபோல, தமிழ் மறைகளின் உள்ளீடும் அடிப்படைக் கடவுள் மெய்யுணர்வும் ஆகிய திருவருள் ஞானத்தைச் சிறந்தெடுத்துத் தெளியவுணர்த்துவது சிவஞான போதம் என்னும் அருமந்த ஞான நூல்.

அது நம் சைவ ஆதீனங்களுக்கு எல்லாம் சந்தான முதற் குரவராக, 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், தமிழ்நாடு செய்த தவத்தானே அவதரித்தருளிய, மெய்யுணர்வின் முற்றுப் பேறு உடைய மெய்கண்ட தேவர் அருளிச் செய்தது.

தேவார திருவாசகங்கள் வேதத்தின் மந்திர பாகம் போல் அமைவன; சிவஞானபோதம் அதன் வார்த்திகம் உட்பட, உபநிடதம் போல்வது; முன்னையவை தெய்வநெறி உணர்த்தும் இலக்கியம்; பின்னையது அவற்றின் பொருளியல் விளக்கும் இலக்கணம். முன்னையவை தம்மை அன்போடு ஓதுவார் உணர்வைத் தூய்மைப்படுத்தி மலரச் செய்து, திருவருள் ஒளியையும் பேரின்ப அனுபவத்தையும் அவ்வுணர்வில் விளைப்பவை; பின்னையது நம் உணர்வின் திருகலை நீக்கி, ஒழுங்குபடுத்தி, அத்திருவருளை ஏற்றுக்கொள்ளும் செவ்வியை உண்டு பண்ணுவது. இப்படித் தமிழ் மறையும், சிவஞானபோதமும் ஒன்றையொன்று விட்டுப் பிரியாதனவாய, பயனும் சாதனமுமாய்

நிற்றலின், அப்பாட்டு இறுதியில், "நீள்வெண்ணெ மெய்கண்டான் செய்த தமிழ் நூலின் திறம் போதமிகு நெய்யின் உறு சுவையாம்" என முடிந்தது. வெண்ணெ-திருவெண்ணெ நல்லூர்.

'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே' என்னும் இலக்கணத்தால், 'நால்வர் ஓது தமிழ்' என்றது பற்றிப் பன்னிரு திருமுறைகளையும் 'மெய்கண்டான் செய்த தமிழ் நூல்' என்றது பற்றிப் பதினன்கு சாத்திரங்களையும் கொள்ளுதல் வேண்டும்.

திருமுறைகள் பன்னிரண்டு என்பது. புறவிருள் நீக்கும் சூரியர் பன்னிருவர் ஆதல் போல, அகவிருள் நீக்கும் அருள் முறைகள் பன்னிரண்டாக உள்ளன என்பதைக் குறிக்கும். திருமுறை ஆசிரியர் இருபத்தெழுவர்; அளவுபடாத வான வெளியின் இடத்தை அளவுபடுத்தி உளங்கொள்ள வைப்பன இருபத்தேழு நட்சத்திரங்கள். அதுபோல முதல்வன் திருவருளை நம் உணர்வில் அளவுபடும்படி விளக்க வந்த அருளாசிரியர்கள் அதே எண்ணிக்கையை உடையராயினர்.

பதினன்கு சாத்திரங்கள் வித்தைகள் பதினன்கு என்னும் மரபைக் குறிப்பன.

திருமுறைகள் பன்னிரண்டும், சாத்திரம் பதினன்கும் சேர்ந்து இருபத்தாறு நூல்கள் ஆகும். இது முதல்வன் வெளிப்படும் அருவுருவ நிலை ஒன்றும், உருவமாகிய மகேசுவர மூர்த்தம் இருபத்தைந்தும் ஆக இருபத்தாறு தடத்த இயல்புகளைக் குறிப்பால் உணர்த்தும்.

இவ்வுண்மைகளை யெல்லாம் தெளிவிக்க வல்ல ஆசிரியர்களை ஆணையர் அவர்கள் நியமித்திருப்பது பாராட்டுதற்கு உரியது. அவ்வாசிரியர்கள் மூலம் அரியவற்றைக் கற்றுணர்ந்து, குற்றம் நீங்கிக் குணமும் மெய்யுணர்வும் நிரம்பப் பெற்றுத் தெய்வநெறியைத் தமிழ்நாடு எங்கணும் பரப்பியும் விளக்கியும் நலன் எய்துவித்தும் எய்தியும் உய்யுமாறு பயிற்சி பெறுவோர்க்குச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் அருள் புரியுமாறு வேண்டுகின்றோம்.

இப்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர்களுக்கும், இதனை அமைத்து நடாத்தும் ஆணையர், துணை ஆணையர் முதலியவர்களுக்கும், மற்றும் இங்கு வந்துள்ள அனைவர்க்கும் மீனாட்சிசுந்தரனாகிய அப்பெருமான், இம்மை மறுமை நலன்களை வேண்டியாங்கு அருள்புரியுமாறு, அப் பெருமான் திருவடிகளை வழுத்துகின்றோம்.

எல்லாம் அரன் நாமமே சூழ்க! வையகமும் துயர் தீர்கவே!!

அப்பர் அருள்முரசு

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

(மலர் 26, இதழ் 1. பக்கம் 39 இன் தொடர்ச்சி)

பிறவிக்கடலில் :

58. மனம் ஒரு தோணி; மதியே அதனைச் செலுத்தும் கோல்; கோபம் முதலிய குற்றங்களே தோணியில் உள்ள சரக்கு; இப்படிப் பிறவிக் கடலிலே ஓடும் தோணி எந்த நேரத்தில் காமம் என்ற கல்லில் மோதிக் கவிழுமோ யார் அறிவார்? இறைவ! உன்னையே உன்னுகின்ற உணர்வைத் தந்தருளுக. (455)

இறைத்தலும் இளைத்தலும் :

59. நான் பாழுக்கு நீர் இறைத்த வகை இப்படி; உள்ளமே தாழி; உயிர்நிற்கும் உடம்பே ஏற்றக்கால், துயரமே ஏற்றம்; துன்பக் கோலைப்பற்றிக் கொண்டு இறைத்த நீரோ பயிரைச் சுழித்ததே யன்றிச் செழிக்க வைத்ததில்லை. இவ்வாறு நான் இளைத்தேன். (504)

மத்தெறி தயிர் :

60. தயிர் கடையும்போது கடையும் மத்துக்குக் கட்டித் தயிர் சிதைந்து, நீராகிப் பணியும் அல்லவா? அதுபோன்றே ஐம்புலச் சேட்டையால் என் உள்ளம் சிதைந்து நீராகிச் சுழல்கின்றது. (506)

விளக்கும் வினரும் :

61. உடம்புக்குள்ளே விளக்கு ஒன்றை ஏற்ற நான் முயல்கின்றேன்; வேண்டிய அளவு அதனைத் தூண்டி இருளை ஓட்டலாம் என்று பார்த்தால், ஐம்புலன்களை அங்கே வைத்தாய். இறைவா! அவர்கள் வலியவர்கள்; எரிய ஓட்டார், என்ன செய்வேன்? (526)

அழுமவர்க்கு அன்பன் :

62. அகம் குழைந்து அழுபவர்க்கும் பற்றெலாம் அற்றவர்க்கும் அன்பன் ஆவான் இறைவன். (540, 41)

எச்சமயமும் நன்றே :

63. அறிவில் விரிவு இல்லாதவர்கள், வேறொரு சமயக் கொள்கையைத் தோற்றி, மனமயக்கத்தாற் சொன்னாலும், அதுவும் எம்பெருமானாகிய இறைவனுக்கு ஏற்றதே யாகும். (586)

மறைநிலை :

64. வேதத்தின் மறைபொருள்; மலரின்தேன்; பாலின் நெய்; கரும்பின் கட்டி; விறகிடைத் தீ; • ஆம்; இப்படித்தான் இறைவனின் மறைந்து நிற்கும் நிலை. (623)

நல்லதுணை :

65. சொல்லால் தொடுக்கப்பெற்ற மாலைகளாகிய பாடல்களைப் பாடித்தொழுது எழுகின்ற அடியார்களுக்கு இறைவனே நல்லதுணை. (641)

குறிக்கோள் வேண்டும் :

66. இளையவனாகவும், மகளிர்மேல் விருப்பம் உடையவனாகவும்; முதுமையும் மெலிவும் உடையவனாகவும் கழிந்த என் வாழ்நாட்கள் உன்னை அடைகின்ற குறிக்கோள் இல்லாமற் கெட்டுவிட்டனவே! என் செய்வேன். (657)

நரகம்புகாதே :

67. அடியார்களை நரகம் புகாமல் தடுப்பவன் இறைவன் ஒருவனே. (685)

சிக்குளே கிடவாதே :

68. நெஞ்சே! மனைவி, தாய், தந்தை, மக்கள் சுற்றத்தார் என்ற வினை விளைவுகளுக்குள்ளே அழுந்தித் துன்பத்திற்கு இடம் ஆகாதே; இறைவனை நினை; இன்பத்திற்கிடமாகலாம் (688.)

சிரித்தேன் :

69. கள்ளத்தை உடையவனுய்க் காலம் போக்கினேன், தெளிந்த பின்னர், நின்னைக்கண்டேன் ; நினைப்பவர் நினைப்பை யெல்லாம் உடன் இருந்து அறிவாய் நீ என்று சிறிது வெள்கினேன் நான் ; அதனுடன் விலா எலும்புகள் இற்றுவிழச் சிரித்தேன். (7-8)

ஒளியில் காட்சி :

70. உடம்பு ஆகிய வீட்டில் உள்ளம் என்ற அகலில், உணர்வு நெய்யை விடு ; உயிரைத் திரியாக்கு ; அதன் நுனியில் ஞானத் தீயைப் பற்றவை ; அந்தப் பேரொளியில் திருவடி யின்பம் கண்டு களிக்கலாம். (729)

இருதலைக்கொள்ளி :

71. இரு பக்கங்களும் தீப்பற்றி எரியும் கொள்ளிக்கட்டை யின்மேல் ஓர் எறும்பின் நிலை எப்படியோ அப்படியே என் நிலை. ஆம் ; உலகியல் ஒருபுறமும், அருளியல் மறுபுறமும் என்னை ஈர்க்கின்றன ; என்ன செய்வேன் ? (731)

இறுதி வேண்டுகோள் :

72. தலைவனே ! நான் இறக்கும் நாளில், 'எங்கிருக்கிருய்?' என்று நான் கேட்பேன் ; 'இங்கிருக்கிறேன்' என்று அன்புடன் கூறி என்னை உன் அருகு சேர்த்துக்கொள்வாயாக. (738)

சிவகதி விளையும் :

73. உண்மை என்பது உழவு ; பக்தி என்பதே வித்தும் விதை ; பொய்ம்மை யெனும் களை வளர்ந்தால் அதை எடுத்து எறி ; பொறை என்னும் நீரைப் பாய்ச்சு ; தகவு என்னும் வேலி இடு ; சிவகதிதானே, விளையும். (737)

ஞானபூசை :

74. நீ உறையும் உடலே இறைவனின் கோயில் ; மனம் உன் அடிமை ; வாய்மையே தூய்மை ; மனமணியே இலிங்க வடிவம் ; அன்பே திருமஞ்சனப்பாலும் நெய்யும் ; இத்தகுஞானப் பூசையைச் செய். (739)

ஊனில் ஆவி :

75. என் உள்ளத்துள் நீ இருக்கிறாய்; மூச்சுக்காற்றாய் என்உள் புகுந்தும் வெளி வந்தும் உள்ளாய்; ஆயினும் நின் நிலை காணுதற்கரியதாக உள்ளது. எங்ஙனம் காண்பேன் நின்னை ? (742)

பிறவி கெடுவது :

76. எண்ணற்ற குற்றங்களை இயற்றுகின்றார்கள் மனிதர்கள்; சிறிதும் நல்ல பாங்கு இல்லை. இத்தகு மனிதர் வாழ்க்கை வெறுக்கத்தக்கதே. இப்பிறவி கெடத்தக்கதே. (745)

தொண்டும் பயனும் :

77. இறைவன் கோயிலை விளக்கித் தூய்மை செய்யும் அன்பர்கள் பெறும் பயனைவிட, கோயிலை மெழுகுபவர் பெறும் பேறு பத்து மடங்காகும்: பூத்தொடுத்து வழிபட்டால் வீட்டுலகம் பெறலாம்; திருவிளக்கு ஏற்றினால் ஞானம் வளரும்; அவனைப்பற்றிய அருட்பாடல்களை ஓதுவோர்க்கு இறைவன் அருளும் வண்ணமோ எண்ணற்றது. (748)

திருவடி மலர்கள் :

78. இறைவா! நின் திருவடி மிக மெல்லியதாயிற்றே; என்னுடைய தலையோ என் நெஞ்சை விடக்கல்லானது; அதில் பட்டால் நின் திருவடிகள் வருந்துமே என்று நான் வாடி ஒடுங்குகின்றேன். (753)

நீர்க்குமிழி :

79. தண்ணீரிலே தோன்றுகின்ற குமிழி போன்று தோன்றி, சிறிது நேரம் நின்று மறைவது இந்த உடல். (765)

ஆமையின் மனநிலை :

80. ஆமையைத் தின்பவர்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதில் ஆமையைப் போடுவார்கள். சூடு ஏற ஏற ஆமைக்கு மகிழ்ச்சி; ஆடித் துள்ளி மகிழும். ஆனால் வெப்பம் உயர்ந்தபின் அது வெந்து துடித்து இறக்கும். அதைப் போலவே ஐம்புலத்தொல்லை மனிதனை வாட்டுகிறது. (769)

ஒன்றியிருந்து நினைக :

81. மனத்தை ஒன்றி இறைவனை நினையுங்கள்; அந்த ஒருமைப்பாடு ஊனங்கள் எல்லாவற்றையும் போக்கும்: உயர்வை உயர்வற உயரும் உயர்வை உண்டாக்கும். (781)

திருக்குறிப்பு :

82. தில்லையில் எம்பெருமானைச் சென்று தொழுதேன்; அங்கே ஆடும் பெருமான் 'என்று வந்தாய்' என்ற திருக் குறிப்பை எனக்கு அருளினன். (781)

சுவடும் இல்லை!

83. என் மனத்துக்குள்ளே எப்படியோ புகுந்துவிட்டான் இறைவன்; எப்படிப் புகுந்தான் என்று அறிய இயலாது; ஆம்; சுவடு தெரியாதபடி நெஞ்சுக்குட் புகுந்துவிட்டான்; அவன். (782)

மனிதப்பிறவியும் வேண்டும் :

84. ஆடுகின்ற பெருமானின் வளைந்த புருவங்கள்; கொவ்வைபோன்ற சிவந்த வாய்; அதில் குமிழியிடும் சிரிப்பு; விரித்த செஞ்சடை; பவள மேனியின் பால்போலும் திருநீறு; இன்பத்தை உயிர்களுக்கு எடுத்து அளிக்கும் தூக்கிய திருவடி; இவற்றைக் காணும்பேறு கிட்டுமானல், இவ்வுலகிற் பிறக்கும் மனிதப் பிறவியும் வேண்டுவதே. (783)

அடிமைத்திறம் :

85. நமக்கன்றே இப்பிறவி வாய்த்துள்ளது! இதனை மதிப் பீர்களாக. தில்லைக் கூத்தனுக்கு ஆடப்பட்டிருப்பதே நம் அடிமைத் திறம் ஆகும். (784)

தொழில் :

86. எல்லாவற்றையும் அளக்கும் ஆற்றல் உடையவன் இறைவன்; அடியவர்களது வினைத் துன்பங்களைத் தீர்ப்பது அவன் தொழில். (814)

இன்பம் அருளுக:

87. இறைவா! உனக்கு நான் சொல்ல நினைப்பது ஒன்று உண்டு; உனக்குத் தொண்டர்களாக வந்தடைந்தவர்கள் துன்பங்களை அநுபவிக்க விடுகின்றாய்; இதனைப் பார்த்த பிறகு வேறென்ன கொடுக்கின்றாய்! (832)

கைகொடுக்கும் கருணை:

88. துன்பம் என்னும் இருள் முன்னே படலம் படலமாக மறைந்து எழுகின்றது. உண்மை அறிவு என்னும் கண்ணொளி இல்லை; பொருள்களைத் தட்டுத் தடுமாறி அலைந்து திரிந்து அடைய வியலாது, புகும் இடம் என்று ஒன்று இன்றி வருந்தும் அத்தகைய குருடர்களுக்கும் அருள் உண்டு; அவர்கள் தொழலால் அவர்களை நரகக் குழியில் வீழ்க்காமல் கருணை உள்ளத்துடன் கைகொடுத்து ஏற்றுபவன் இறைவன். (8[illegible]6)

அமுதம் காண்க:

89. அகம் கனித்து அழுபவர்களுக்கே அமுதம்போல் இனிப்பான் இறைவன்.

இன்பநிழல்:

90. துன்பம் என்ற வெயில் சுட்டெரிக்கும்போது, அரிதிற் கிடைத்த நிழல் அடியவர்களுக்கு இறைவன் திருவடிச் சிந்தனையே. (901)

வேண்டும் வரம்:

91. நான் புழுவாகப் பிறந்தாலும் இறைவா! உன் திருவடி நினைவு என் உள்ளத்தில் வழுவாமல் இருத்தல் வேண்டும்; இதுவே, என் தலைவ! நான் விரும்பும் வரம் ஆகும். (920)

எதுவரினும் என்ன?

92. மண் உலகம் பாதாள உலகத்திற்குள், செல்லினும் செல்க; உலகம் எல்லாம் கடல் எழுந்து அலை மூடினும் மூடுக; விண்ணில் சூரிய சந்திரர்கள் திசைமாறினும் மாறுக; அவை உதிர்ந்து உலகம் எல்லாம் இருள் சூழினும் சூழ்க; நெஞ்சே! அஞ்சாதே, இறைவன் திருவடியே நமக்குத் திண்ணிய துணை. (921)

(தொடரும்)

'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 26, இதழ் 1, பக்கம் 29 இன் தொடர்ச்சி)

பாவலர் போற்றும் பதிற்றுப் பத்து :

ஒத்த பதிற்றுப்பத்து என்ற அடைமொழியுடன் எட்டுத் தொகையுள் இடம்பெற்ற நான்காவது நூல் இதுவாகும். தமிழரின் வீரத்தை, பெருமையைப் பறைசாற்றும் விழுமிய நூல். சேரவளநாட்டை ஆண்ட செந்தமிழ் மன்னர்களின் வரலாற்று நூல் இது என்போரும் உண்டு. சேரமன்னர் பதின்மரைப் பற்றிய நூறு பாடல்கள் கொண்ட இந்நூலில் இப்பொழுது கிடைத்துள்ளது எட்டுப்பத்துதான். முதற் பத்தும், இறுதிப் பத்தும் எப்படியோ மறைந்தன. எஞ்சிய எட்டுப் பத்துப் பாடல்களின் (எண்பது) தொகுப்புதான் இன்றைய பதிற்றுப் பத்து.

ஒவ்வொரு பத்தின் முன்னும் 'பதிகம்' என்ற வொன்று அமைந்துள்ளது. அது நம் சோழ மன்னர்களின் மெய்க் கீர்த்தியை ஒத்த அமைப்புக் கொண்டது. அதன்மூலம் பாடிய வர், பாடப்பட்டவர் - பாடிப் பெற்ற பரிசில் ஆகியவற்றை அறிகிறோம். சேர அரசர் பரம்பரையின் புகழ் நிலைக்கக் காரண மான பல அரசர்களையும் இதனுள் பாடிப் புகழ்ந்துள்ளார்கள் புலவர் பெருமக்கள். அவர்களின் உளம் உவப்பப் புரவலர்களும் பரிசில் நல்கிச் சிறப்பித்திருக்கிறார்கள்.

அம்முறைப்படி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல் யானைச் செல்கெழு குட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, குடக்கோ இளஞ்சேரல் இரும் பொறை ஆகிய மன்னர் பெருமக்களை முறையே குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் என்ற புலவர் பெருந்தகைகள் பாடி ஏற்றம் தந்துள்ளனர்.

இனி சேரமா மன்னர்களின் வீரம், கொடை, அன்புணர்ச்சி இவைகளைச் சில பாடல்களால் துணிவுபெற அறியலாம்.

புலவன் தன்னுடைய வறுமை நிலையைச் செஞ்சொற்களால் படம்பிடிக்கும் பான்மையைப் பாருங்கள். மழையால் நனைந்த பருந்தின் சிறகினையொத்த ஆடை என்று வருணனை செய்கிறான். அதோடு பலநாட்களாக சுவையுணவு காணப்பெறாத சுற்றமும் கொண்டவன். கன்றுபுணர்பிடிகள் நிறைந்த குன்றுபல கடந்துவந்த அப்புலவனின் வயிறும், மனமும் நிறையும்படி அன்புசெய்தான் சேரமன்னன். அந் நன்றி, பாட்டாக மலர்கிறது.

"நீர்ப்படு பருந்தின் ஈர்ஞ் சிறகன்ன
நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்தோள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய
அமர்பு மெய்யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிது நின் பெருங்கலி மகிழ்வே."
— (பதிற்று - 12)

கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பாடவந்த கரணமமைந்த காசறு செய்யுள் பரணர் அவனது கொடைச் சிறப்பினைப் பல விடங்களிலும் விதந்தோதுகின்றார். ஆர்கலிவானம் தளி சொரிந்தது போல புலவர்களுக்கும், கூத்தர்களுக்கும் பொற் கலன்கள் பலவற்றை நல்கி, கின்னரப் பறவையை வெல்லும் யாழின் இசையோடு இயையப் பாடும் விறலியர்க்குப் பலபிடிகளை யும் தந்து பெருமைப் படுத்துவான். பகைவர்க்கு அச்சத்தை விளைவிக்கும் வீரர்களுக்குக் கொல்களிறுகளையும் போர்க்களத்தை வாழ்த்திப் பாடும் பாணர்களுக்குக் குதிரைகளையும் வழங்கும் கொடைத் தொழிலை மேற்கொண்டவன். இத்தகைய பண்பாளனை 'ஏறுவேணி' - யில் நாம் பார்க்கும்படிக் காட்டுகிறார்.

தம் உள்ளத்தின் உவகையை வெளிப்படுத்தும் முகமாக முழுவலிதுஞ்சும் நோயில்லாத இவன் உடம்பை - இவனைப் பாடும் விறலியர் மட்டுமே காணட்டும். வன்னிமரம் நின்ற காட்டின்கண் உள்ள மன்னர் மறைத்த தாழி இவனுடலைக் காணுதொழியட்டும் - என்று வாழ்த்துகிறார்.

ஆறும் பத்தில் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர் பெருமாட்டியார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடியுள்ளார். அவனது கை இரப்போர்க்குக் கவிதல்

அன்றி இரைஇய மலர்ப்பறியாது என்று குறிப்பிடுவார். ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும் இரவலர் புன்கண் கண்டு அஞ்சும் இயல்புடையான் என்பார், அவனுடைய நாடோ புன்புலம்வித்தும் வன்கை வினைஞர் சீருடைப் பல்பக டொலிப்பப் பூட்டி நாஞ்சிலாடிய கொழுவழியிலே அலங்குகதிர் திருமணி பெறும் வளமுடையது என்று தெரிவிக்கிறார்.

ஆசிரியர் கபிலர் பாரியின் நெருங்கிய தோழர். பிறிதொரு சமயம் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடவந்து பார்ப்பார்க் கல்லது பணிவு அறியாதவன், நட்டோர்க்கன்றி கண்ணாஞ்சாத வன், மணங்கமழ் அகலம் மகளிர்க்கல்லது மலர்ப்பறியாதவன், நிலம் திறம் பெயருங் காலையாயினும் கிளந்த சொல் பொய்ப் பறியாதவன் - என்றெல்லாம் பாடினார். இருந்தும் அவர் மனத்திலிருந்து பாரிபால் கொண்ட அன்பை அகற்றமுடிய வில்லை.

"பாரி பாரி என்று பலவேத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகு புரப்பதுவே,"
(புறம் - 107)

என்று பாரியைப் போற்றிப் பாடியவர் அல்லவா. ஆகவே வாழியாதன் முன்னிலையில் எழும் தன் உள்ளத்து உணர்ச்சி களை எல்லாம் ஒளிக்காமல் அப்படியே பாடுகிறார். பலாப்பழத் தின் தேனை வாடைக் காற்றுத் தூற்றும் பறம்புநாடு. ஓவிய மன்ன நல்ல மனையின்கண் உள்ள பாவை நல்லாளின் கணவ னும், உன்னத்தின் பகைவனும் ஆகிய எங்கள் பாரி முழவுமண் புலர, இரவலர் இரங்க விண்ணுலகடைந்தான். வாளும், களிறும் நிறைந்த புலால் நாற்றம் வீசும் பாசறையிடத்தே உன்னைக் காணவந்தது - என்னை நீ ஆதரிக்க வேண்டும் என்பதால் அல்ல. இருப்பினும் உனது புகழைக் குன்றவோ மிகைபடவோ கூறமாட்டேன். செல்வக் கடுங்கோ வாழியாதன் ஈதலால் பொருள் செலவாகிறதே என்று மனம் வருந்தான். ஈத்தொறும் மகிழ்தலும் இல்லை. ஈயுந்தோறும் மாவள்ளியன் என்று உலகோர் கூறும் நினது நல்ல புகழ் எம்மை ஈர்ப்ப நின்பால் வந்தேன் என்று மனந்திறந்து பேசும் பாங்கைப் பார்க்கலாம்.

பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல்
வாடை துறக்கு நாடுகெழு பெருவிறல்
ஓவத் தன்ன வினைபுனை நல்லில்

பாவை யன்ன நல்லோற் கணவன்
பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ
புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர இரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென
இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்
ஈத்த திரங்கா னீத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள்ளியனென நுவலுநின்
நல்லிசை தரவந் திசினே யொள்வாள்
உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவி னன்ன வெள்வேல் பாடினி
முழவிற் போக்கிய வெண்கை
விழவி னன்னநின் கலிமகி ழானே.

—புலாஅம் பாசறை.

சேரமன்னர்களின் செய்தித் தொகுப்பாம் பதிற்றுப்பத்து - குறித்துக் காட்டும் செய்திகளுக்கு அளவே இல்லை.

வீரமுள்ள மறக்குடியினர் மன்னர்பால் கொண்டுள்ள அன்பின் ஆழத்தைச் சிலபல இடங்களில் சுட்டிச் செல்கின்றனர் புலவர்கள். புலவர்களின் மனம் நிறைந்த வாழ்த்துக்களைப் பெற ஓம்பா ஈகையைக் கொண்டு வாழ்ந்த புரவலர்களின் வரலாறே பதிற்றுப்பத்து. (விரியும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

I had been to the temple, with my family. Maintenance is very good. The entire place is very clean. Things are done in an orderly manner. The religious atmosphere is properly kept, and you feel both physically and spiritually attracted to the temple. May the Adheenam continue in their good work, as now.

(Sd.) R. Krishnamoorthi,
Deputy Chief Commercial
Superintendent,
Southern Railway, Madras.

24—12—66.

திருவிழா

திரு. நீலகண்ட சர்மா, சுசீந்திரம்

விழாக்கள் அதிகப்பட்டுவரும் காலம் இது. சிறிது காலத்திற்கு முன் கோவில் திருவிழாக்களை மட்டுமே நாம் அதிகமாகக் கேட்டிருந்தோம். இப்போது திறப்புவிழா, ஆண்டுவிழா, கல்நாட்டுவிழா, முதலிய விழாக்கள்தான் அதிகமாய் கேட்கப் படுகிறது. ஆனால் கோயில்களில் நடக்கும் விழாவிற்கு மட்டுமே திருவிழா என்று சொல்லப்படுகிறது. பெருமையைக் குறிப்பிடும் திரு என்னும் வார்த்தை தெய்வீகத்தன்மையைக் குறிப்பிடுகிறது. விழா என்பதற்குக் கொண்டாட்டம் என்று பொருள் ; ஆனால் திருவிழா என்றால் கொண்டாட்டம் மட்டுமல்ல.

मह, उद्भव, उत्सवः

என்று வடமொழியில் அதற்கு விவரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மஹமென்றால் கொண்டாட்டம் என்பதைத்தவிர விசேஷ பூஜை என்றும் பொருள். திருவிழாக் காலங்களில் கோயில்களில் விசேஷ பூஜை நடப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அந்த ஸந்தர்பத்திலாவது தேவனை வழிபட பக்தர்களை வரவழைக்கவும் ; சொற்பொழிவுகள், இனிய சங்கீதம், மற்றும் ஏனைய கலாநிகழ்ச்சிகள் இவைகள் மூலமாக தெய்வீகச் சிந்தையும் அறநெறியும் வளரச்செய்வதற்கும் திருவிழாக்கள் பயன் படுகின்றன.

விசேஷ பூஜைகள் அவ்வப்போது நடத்துவது ஒவ்வொரு கோயிலுக்கும் மிக அவசியம். அதனால் பூஜிக்கப்படும் தேவதைக்கு சைதன்யம் அதிகப்படும் என்பது சாஸ்திரம் சொல்லுகிறது.

உத்தவம் (**उद्भवः**) என்றால் கஷ்டத்தை இல்லாமல் செய்வது (**उद्दुनोति दुःखम्**) என்றும், உத்ஸவம் (**उत्सवः**) என்றால் சுகத்தைக் கொடுப்பது என்றும் பொருள். உத்ஸவ காலங்களில் அதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் ஒரு விசேஷ நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படுவது மட்டுமல்ல. விசேஷ பூஜைகள் நடக்கும்போது கோயில்களில் தரிசிப்பதும் வழிபடுவதும் தீராத நோய்களைக் கூட தீர்த்துவைக்கும் என்பதும் உலகம் கண்ட

உண்மை. கோயில்கட்டி தேவனைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் நடத்தும்போது கோவிலுக்குத் தகுந்தாற்போலுள்ள உற்சவங்களும் ஏற்படுத்தவேண்டும். பெரிய கட்டிடங்களைக் கட்டினால் சுத்தமாய் வைத்திருக்கவும், பழுதுபார்க்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமல்லவா ?

பெரிய தேவாலயங்கள் திருவிழாக்கள் காரணமாக சீரும் சிறப்புமாக விளங்குவதை நாம் காண்கிறோம். அதல்லாமல் யாருக்குமே தெரியாமல் கவனிப்பதற்கும் ஆளில்லாமல் சில இடங்களில் பெரிய கோவில்கள் இருப்பதையும் நாம் அறிகிறோம். சந்தோஷமான பொழுதுபோக்குக்கு ஸந்தர்ப்பமளிப்பதுமட்டுமல்லாமல் திருவிழாக்கள் நமது கலைகளை வளர்ப்பதற்கும் மிகவும் பயன்படுகின்றன.

தந்திரஸமுச்சயமெனும் மிக முக்கியமான நூலில்

अथ प्रतिष्ठास्नपनाद्यनन्तरम् ।
समाचरेत् पर्वसु सर्वसूत्सवः ॥
ततो नु संवत्सरमुक्तवासरे ।
व्यवस्थया चाखिलसंपदाप्तये ॥

(பிரதிஷ்டை கும்பாபிஷேகம் முதலியன நடந்தபின் அந்த நாள், நக்ஷத்திரங்களையொட்டி ஒவ்வொரு வருஷமும் உற்சவம் நடத்த வேண்டும். அது தேசத்திற்கு எல்லாவித நன்மைகளையும் அளிக்கும்) என்றும், ஈசான சிவகுருதேவ பத்ததி என்னும் ஆகம நூலில்,

महोत्सवविधिः शम्भोः कथ्यते येन तर्पिताः ।
गणाः सगथनाणाःस्युः सर्वशान्तिप्रदा नृणाम् ।
प्रतिसंवत्सरं वापि प्रतिषण्मासमेव वा ।
शिवयात्रोत्सवं सम्यक् कुर्यात् सर्वार्थसिद्धये ॥

(6 மாதத்திற்கு ஒருமுறையோ ஒரு வருஷத்திற்கு ஒருமுறையோ கோவில்களில் திருவிழா நடத்துவது தேசத்திற்கு எல்லாவிதமான க்ஷேமங்களையும் கொடுப்பதோடு நமது குறைகளையும் தீர்த்துவைக்கும்) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

உத்ஸவங்கள் நித்யோத்ஸவம் முதல் வருஷோத்ஸவம்வரை பலவிதமாக உள்ளது. அவைகளின் முறைகளும் விவரமாக சாஸ்திரக் கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது. இன்று பல கோயில்களிலும் உத்ஸவ காலங்களில் பூஜாதிகளில் வேண்டிய கவனத்தை விட்டு ஆடம்பர காரியங்களில் அதிக கவனம் கொடுக்கப்படுவது வருந்தத்தக்கதே.

கோவில் ஆணையாளர்களும் பக்தர்களும் இந்தத் தத்வங்களை உணர்ந்து வேண்டியது செய்வார்களாக.

ஓம் நம:சிவாய.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

It is indeed a happy occasion for me and my family in visiting this shrine. The temple is kept perfectly clean, inspiring awe and reverence as one enters the temple. I am grateful to the temple staff for taking me round giving details of puranic origins.

28—12—66.

(Sd.) K. Duraisamy,
Executive Engineer,
P. W. D. Tanjore.

தஞ்சை மாவட்டத்தில் நான் பார்த்த பல கோயில்களுள் மிகச் சுத்தமான முறையில் வைக்கப்பட்டு மனம் ஒன்றி வழிபடும் கோயிலாக உள்ளது இக்கடவூர்க் கோயில். அபிராமி அம்மன் சந்நதியும் குறிப்பிடத்தக்க முறையில் இருக்கிறது.

பேர்பெற்ற இத் தல மகிமையைப் போற்றும்விதத்தில் இதை நடத்திவரும் தர்மபுர ஆதீன நிர்வாகிகட்குப் பாராட்டு.

29—12—66.

(Sd.) சா. சு. மணி,
Addl. P. A. to Collector,
Thanjavoor.

ஆறும் நூறும்

ஆறு என்ற எண்ணினையும், நூறு என்ற எண்ணினையும் பல இடங்களில் இணைத்துக் கூறுதல் தமிழ்மொழியில் வழக்கமாக உள்ளது. 'நூறு குழிக்கு ஆறுகுழி போதும்' என்பது. வேளாண்மைத் தொழிலிலே வழங்கும் ஒரு பழமொழி. 'நிலத்தில் தக்கபடி உழைத்துப் பயிர் செய்யாமல், பெருக்கு நூறுகுழி பயிர்செய்வதைவிட, நன்றாக உழைத்து ஆறுகுழி பயிர்செய்வது நலம்' என்பது இப்பழமொழியின் பொருள். இஃது ஏர்க்களப் பழமொழி.

இவ்வாறே போர்க்களத்தில் செல்லும் வீரர்களிடையேயும் வழங்கும் பழமொழி ஒன்று உண்டு. 'தண்டில் போனால் இரண்டில் ஒன்று' என்றபடி, போருக்குச் செல்பவர் பகைவரை வென்று வாகை மாலை சூடுதல், அஃது இல்லையேல் உயிர் கொடுத்துப் புகழ்கொண்டு வீரசுவர்க்கம் சேர்தல் என்ற இரண்டில் ஒன்றே செய்யத்தக்கது. இவை தவிர மூன்றாவதாகப் புறங்காட்டித் திரும்புதல் என்பது இல்லை. பகைவன் வெல்லமுடியாது உயிர்கொடுக்கும் நிலைவருமாயின், அவர்கள் அது குறித்து 'இறப்பு, ஆறிலும் உண்டு, நூறிலும் உண்டு' என்று சொல்லி, உடம்பின் நிலையாமையையும், புகழின் நிலைபேற்றையும் நினைவு கூர்ந்து வீரத்துடன் போரிடுவர். இப்படி ஆறும், நூறும் சேர்த்துச் சொல்லப்படும் இடங்கள் சில உள. அம்முறையில் திருமூலர் தமது திருமந்திரத்தில் ஒரு கருத்தை அருளுகின்றார்.

"ஆறு பறவைகள் ஐந்தகத் துள்ளன ;
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன ;
ஏறும் பெரும்பதி ஏழும் கடந்தபின்,
மாறுத லின்றி மனைபுக லாமே"

என்பது அத் திருமந்திரம். இதில் 'ஆறு பறவைகள், நூறு பறவைகள்' என்பன எவை ? 'காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்' என்னும் ஆறு குற்றங்களே ஆறு பறவைகள். ஐந்து அகம், பஞ்சபூதங்களாலாகிய உடம்பு. இந்த உடம்பாகிய அகத்தில் - இல்லத்தில் உயிர் குடியிருக்கின்றது.

ஆனல், இந்த இல்லம் அந்த ஆறு பறவைகள் மறைந்து வசிப்பதற்கு உரிய பாழ்மனையேயன்றி, உயிர் எப்பொழுதும் தங்கி நல்வாழ்வு வாழ்வதற்குரிய நல்லகம் அன்று. அதனல், இதில் தங்கியிருக்கின்ற உயிர் அந்தப் பறவைகள் வந்து தன்னைக் கொத்தித் தின்ன மிகவும் துன்பத்திற்கு ஆளாய் இடர்ப்படுகின்றது.

இவற்றிற்குமேல் இன்னும் நூறு பறவைகள் இருக்கின்றன. அவை மரத்தின் நுனியில் இருக்கின்றன. நூறு பறவைகளாவன, உயிரினிடத்து உண்டாகின்ற பலவகையான இச்சைகளும், அவற்றின் வழியே தோன்றுகின்ற எண்ணங்களுமாகும். எண்ணங்கள் தோன்றுவது புருவ நடுவில்தான் என்பது சாத்திரங்களின் முடிவு. ஆறு ஆதாரங்களில் புருவநடு ஆருவதாகச் சொல்லப்படும். ஆகையால் அது நுனிக்கொம்பாகிறது, அங்கு உண்டாகின்ற எண்ணங்கள் பறவைகளாகின்றன. உயிர் தான் என்றும் நிலைத்து வாழ்வதற்குரிய நன்மனை 'வீடு' என்கின்ற முத்திநிலையேயாம்.

ஆறும், நூறுமாகிய பறவைகள் எப்பொழுதும் இருந்து தொல்லைப்படுத்துகின்ற இந்த பாழ்மனையை விட்டு வீடாகிய நன்மனையை உயிர் அடைய வேண்டுமாயின், ஏழு பெரிய ஊர்களை அது கடக்கவேண்டுமாம்' ஏழு பெரிய ஊர்கள் எவை ? ஆறு ஆதாரங்களும், அவற்றிற்கு மேலே உள்ள பிரமரந்திரமுமாம். ஆறு ஆதாரங்களாவன, 'மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை' என்பன ; இவை, ஆசனத்திற்கு மேல் உள்ள இடம், அதற்கு மேலும் உந்திக்குக் கீழும் உள்ள இடம், உந்தி, இருதயம், கண்டம், புருவநடு என்னும் இடங்களாம். இதற்கு மேலே உள்ள பிரமரந்திரத்தையும் ஆதார யோக முறையால் கடந்து, நிராதார யோக முறையிலே தலைக்குமேல் பன்னிரண்டங்குலமாகிய துவாதசாந்தப் பெருவெளியில் கலப்பதே வீடுபேறு. அதனையே, 'ஏறு பெரும்பதி ஏழும் கடந்தபின் - மாறுதலின்றி மனைபுக லாமே' என்கின்ருர் திருமூலர். அவர் இந்த யோகமெல்லாம் கைவரப்பெற்றவராகலின், நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று அவர் அருளிச்செய்த இதனை அனைவரும் அறிந்து பயன்பெறுவோமாக.

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

(மலர் 26, இதழ் 1, பக்கம் 20 இன் தொடர்ச்சி)

வைத்தேன் மறைபுகழ் தாட்டா மரையை மனமதனிற்
பொய்த்தே னுலகின் பனைத்தையும் வேறென் புகலுவனுன்
மெய்த் தேவரென்று சிலதேவ ரென்னெதிர் மேவிடினுங்
கைத் தேனவரை வணங்கேன் றயிலம்மை கண்டுகொள்ளே. 57

(இ - ள்) தயிலம்மையே ! மறைபுகழ் தாள் தாமரையை மனம் அதனில் வைத்தேன் - வேதங்களால் பெரிதும் புகழப் பெற்ற தேவரீருடைய திருவடிக்கமலங்களை உள்ளத்தே உறையுமாறு வைத்துவிட்டேன். உலகு இன்பு அனைத்தையும் பொய்த்தேன் - உலகத்தினிடத்து (மாயாப் பிரபஞ்சத்திடத்துண்டாகும்) ஐம்புலன்களால் அடையப்பெறும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் (மண், பெண், பொன்) சிற்றின்பங்களைப் பொய்ம்மையுடைத்தென்று கருதியகற்றிவிட்டேன். வேறு (எவன்) என் புகலுவன் நான் - அடியனேன் தனியாக யாது எடுத்துக் கூறக்கடவேன், சிலதேவர் என் எதிர் மெய் தேவர் என்று மேவிடினும் - செத்துப் பிறக்கின்ற சில கடவுளர் அடியவன் முன்னர் உண்மைக்கடவுளர் என்று கருதுமாறு வந்தடையினும், அவரை கைத்தேன் வணங்கேன்-அவர்தம்மை வெறுத்து வணங்கலும் செய்யேன். கண்டு கொள் ஏ - இச் செயலை திருநோக்கஞ்செய்து அருளுக. (எ - று)

(கு - ரை) கைத்தல்-வெறுத்தல். தாள் தாமரை - தாட்டாமரை. (மரைத்தாள்) வேறு-தனி. புகலல்-கூறல். கைத்தேன் - கைத்து. முற்றெச்சம். இன்பு - இன்பம். பொய்த்து - அழிவுடையது. (எ - று)

கண்டேன் பிரபஞ்ச வாழ்க்கையைப் பொய்யென்று காதலெல்லாம்
விண்டே னினதடி யாருடன் கூடி விரும்பி யுன்றன்
றொண்டே சதமெனச் செய்குவன் வேளூர் துலங்கவந்த
கண்டே யெதுமொழி யாய்தைய னாயகி காத்தருளே 58

(இ - ள்) பிரபஞ்சம் வாழ்க்கையை பொய் என்று கண்டேன் - உலகவாழ்வினைப் பெரிதும் பொய்ம்மையுடையது என்று ஆய்ந்து தெளிந்தேன், காதல் எல்லாம் விண்டேன் - எல்லா

ஆசைகளையும் விட்டு நீங்கினேன், நினது அடியாருடன் கூடி விரும்பி-தேவரீருடைய உண்மைத் தொண்டர்களோடு சேர்ந்து காதலித்து, உன்றன் தொண்டே சதம் என செய்வேன் - தேவரீருடைய திருவடித்தொழும்பே பற்று எனச் செய்திடுவேன். வேளூர் துலங்கவந்த கண்டு ஏ, என்னும் மொழியாம் தையல் நாயகி – வேளூர் என்னும் தலமானது விளங்குமாறு எழுந்தருளி வந்த கற்கண்டுபோலும் இனிய மொழிகளையுடைய பாலாம்பிகைத் தாயே. காத்தருள் ஏ - பிறவிப் பெருங்கடலால் வீழ்ந்திடாவாறு காத்தருளுவீராக. (எ - று)

(கு -) பிரபஞ்சம் - உலகு. (பொய்ம்மையான வாழ்வுடையது) காதல் - பற்றுள்ளம் உடைமை, விண்டேன் - நீங்கினேன். சதம் - பற்றுக்கோடு துலங்கல் – விளக்கம் உறல், கண்டு - கற்கண்டு (மிக்கவினிமையுடையது)

காவார் வயித்திய நாதன் றளிப்படிக் கல்லெனவே
மேவா விருந்தில னவ்விடம் போய்வரு மெய்யடியார்
தேவாதி தேவ ரடியூன்றச் சென்மமுந் தேய்ந்துறுமே
வாவா வருள்செய வேதயி லம்மை வழுத்தினனே. 59

(இ - ல்) கா ஆர் வயித்தியநாதன் தளி படி கல் எனவே மேவா இருந்திலன் - சோலைகள் நிறைந்த (காவல் பொருந்திய) வைத்தீச்சுரன் எழுந்தருளிய திருக்கோயிலின்கண்உள்ள வாயிற் படிக் கல்லாகப் பொருந்தி இருந்தேனில்லை. (அப்படிக் கல்லாகப் பொருந்திருப்பேனுயின்) அவ்விடம் போய்வரும் - சந்நிதிக்குச் சென்று திரும்பும், மெய் அடியார் தேவர் அதிதேவர் - உண்மையடியவர்களும் தேவர்களும் அவர்கட்கரசரும் ஆகியோருடைய. அடி ஊன்ற - திருவடி மிதியுண்ணப் பெறலால், சென்மமும் – பிறவிப் பெரும் பிணியும், தேய்ந்தூரும் ஏ - மீண்டும் அந்நெறி வாராதவாறு அழிந்தொழியப்பெறும் அல்லவா? தயிலம்மை வழுத்தினன் - தயிலம்மையாரே அடியவன் வழுத்துதலைச் செய்தேன் - அருள் செய வா வா – திருவருள் புரிந்திட எழுந்தருளி வருக வருக. (எ - று)

(கு – ரை) கா - பொழில் (சோலை). தளி - திருக்கோயில், மேவல் – பொருந்தல், ஆதிதேவர் - பிரமவிட்டுணுக்கள். இந்திரன் முதலானோர், ஊன்றல் - மிதித்தல், வழுத்தல் – துதிசெய்தல் (வணங்கல்)

வழுத்துவ தென்னினி வாணுன் முழுமையும் வாதனையிற்
பழுத்துன் றிருவடிக் கேபல கூறிப் பரிந்து நின்றேன்
வழுத்தவிர்ந் தேயெனைப் பொன்னடிக் கீழ்நிற்க வாஞ்சைவைத்து
முழுத்த முதல்வியாம் வேளூர்த் தயிலம்மை முன்னுவையே. 60

(இ - ள்) இனி வழுத்துவது என்-இப்பொழுது (இனிமேல்) வாழ்த்தித்துதி செய்வது என்னை? வாள்நாள் முழுமையும் வாதனையில் பழுத்து - வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ்ந்த கால முற்றிலும் துன்பத்திடை முதிரப்பெற்று, உன் திரு அடிக்கு ஏ பல கூறி பரிந்து நின்றேன் - தேவரீருடைய திருவடிக்கண் பற்றுவைத்துப் பலபடியாகச் சொல்லி, விரும்பி நிலைத்துளேன்- வேளூர் தயிலம்மை-வைத்தீசுவரன்கோயில் எனும் திருப்பதியின் கண் எழுந்தருளிய தைலம்மைத் தாயே! முழுத்த முதல்வி ஆம்- பரிபூரணமாம் விளங்கிடும், தாயே, வாஞ்சைவைத்து - அன்பு வைத்து, வழு தவிர்த்து - குற்றங்களை நந்து, என்னை பொன் அடி கீழ் நிற்க முன்னுவை ஏ - அடியவனை அழகிய திருவடியின் கண் பற்றுக்கோடாக நிலைபெற திருவுளம்பற்றியருளுக.

(கு - ரை) முழுத்த-நிறைந்த. முதல்வி - முதன்மை பெற்ற வள். வழு - மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் நேர்ந்த குற்றங்கள். பழுத்தல் - முதிர்தல் (முற்றியதாதல்). பரிந்து - விரும்பி, முன்னல் - கருதல். வாஞ்சை - அன்பு. நிற்க - நிலை பெறுமாறு இருக்க.

முன்னீ ரவனியில் வாழ்புல வீரென் மொழியுணர்மின்
வெந்நீ ரொழித்துநந் தாயார்தண் ணீரை மிகவிரும்பிச்
சொன்னீ ரெனிற்சுக மாஞ்சென்ம சாபல்யந் தோற்றிநறும்
பன்னீர் வளமலி வேளூர்த் தயிலம்மை பாலிப்பளே. 61

(இ - ள்) முன்னீர் அவனியில் வாழ்புலவீர் - கடலாற் சூழப் பட்ட பூமி மண்டலத்தில் வாழ்க்கை புரிகின்ற நன்கு பயின்ற புலமைமிக்கவர்களே! என்மொழி உணர்மின் - அடியவனுடைய சொற்களை நன்கு அறிவீர்களாக. நறும் பன்னீர் வளம்மலி வேளூர் தயிலம்மை நம் தாயார் (பாலிப்பள்) - நறுமணம் கம ழும் பன்னீர் வளமிக்க வைத்தீச்சுரன் கோயிலாகிய புள்ளிருக்கு வேளூர் என்னும் பதியில் எழுந்தருளியுள்ள தயிலம்மையாகிய நம் அன்னையார் ஆனவர். வெந்நீர் ஒழித்து - வெம்மைத் தன்மை யினை நீக்கித் தண்ணீரை மிகவிரும்பி - குளிர்ச்சித் தன்மையினை மிகவும் நச்சி, சொன்னீர் எனின்-கூறுவீர்களாயின். சுகம் ஆகும் - நன்மையுண்டாகும். சென்மம் சாபல்யம் தோற்றி - பிறவியினு லாகிய நற்பேற்றினை யுண்டுபண்ணி; பாலிப்பள் - கொடுத் தருளுவள். (எ - று.)

(கு – ரை) முன்னீர் - முத்தன்மையுடையது கடல், அவனி- பூமி. வெம்நீர்-வென்னீரெனவாயது. சுடுநீர் எனும் பொருளது. தண்ணீர் - தட்பமாகிய நீர், சென்மம் - பிறப்பு, சாபல்யம் - பேறு. பாலித்தல் - கொடுத்தல். (எ • று)

பாதார விந்தத்தை யேதான மாவெண்ணிப் பாட்டையெல்லாம்
சாதா ரணமுட னோதா விருந்தனன் சந்ததமுங்
காதாரக் கேட்டுநீ தானருள் செய்யக் கருதுவையேல்
ஆதார மாங்கழ லுதா தயிலம்மை யாண்டவளே ! 62

(இ - ள்) பாதம் அரவிந்தத்தையே - தேவரீவருடைய திருவடித்தாமரை மலரிணையையே. தானம் ஆ எண்ணி - தேனுகிய இடமாகும் என்று கருதி, பாட்டை எல்லாம் - செய்யுட்களையெல்லாம் சாதாரணம் உடன் ஓதா சந்ததமும் இருந்தனன் - பொதுவாகவே உடனுக ஓதி எப்போதும் இருந்தேன். தயிலம்மை ஆண்ட்வள் ஏ - தைலம்மையாகிய ஆண்டருள் புரியும் தாயே; (சந்ததமும்-எப்போதும்) நீ தான் - காதாரக் கேட்டு அருள் செய்ய. கருதுவையேல் - திருச்செவிகள் நிரம்புறக் கேட்டுத் திருவருள் பாலிப்ப எண்ணுவையே யாயின், ஆதாரம் ஆகும் கழல்தா தா - உயிர்கட்குப் பெரும்பற்றுக் கோடு ஆகும் திருவடிகளைத் தருவீராக தருவீராக.

(கு - ரை) தானம் - இடம் (தேன்) அரவிந்தம் - தாமரை பொருளாகு பெயராய் மலருக்காயிற்று. ஓதா - ஓதி, சந்ததம் ; எப்போதும் கழல் – திருவடி.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam.

நான் ஆலய வழிபாடு செய்தேன். ஆலய வழிபாடு இத் திருக்கோயிலில் அருட்பெருவெள்ளத்தை அருளிச் செய்தது.

(Sd.) S. K. Arumugam.
30—12—66.
(கும்பகோணம், வலங்கிமான்
முன்சீப் கோர்ட் முன்சீப்.)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

தலவழிபாடு

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அண்மையில் நிகழ்ந்த தமிழ்நாடு தெய்வீகப் பேரவைக் கூட்டத்திற்காக, சென்னைக்கு எழுந்தருளியபோது கீழ்க்காணும் தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றியருளி னார்கள்.

ஞாயிறு :

சங்கிலியார் திருவவதாரம் செய்த ஊர் ஞாயிறு. இத் தலம் சென்னைக்கு வடக்கே 36 மைல் தொலைவில் உள்ளது.

கயிலைமால் வரையில் பார்வதிதேவியின் பணிப்பெண்ணாய் அநிந்திதை என்ற பெயரோடு விளங்கி, ஆலாலசுந்தரரை மணம் புரிதற்கு ஞாயிறு என்ற ஊரில் ஞாயிறு கிழார் என்ற வேளா ளர்க்குத் திருமகளாகத் தோன்றியவர் சங்கிலியார். இறைவன் கட்டளைப்படியே எனக்குத் திருமணம் என்று கூறித் திருவொற்றி யூர் வந்து அங்குக் கன்னிமாடம் அமைக்கச் செய்து அங்குத் தங்கி இறைபணி செய்துகொண்டிருந்தவர் இவர்.

சுந்தரர் திருவொற்றியூர் வந்தபோது சங்கிலியை எனக்கு மணம் முடித்துவைக்க வேண்டுமென்று இறைவனை வேண்ட இறைவன் அவ்வண்ணமே சுந்தரர்க்குச் சங்கிலியாரை மணம் புணர்த்தியருளுகின்றான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற் றில் இந்நிகழ்ச்சி விரிவாகக் கூறப்படுகிறது.

இத் தலத்தில் உள்ள இறைவன் திருப்பெயர் புஷ்பரதீசுரர் அம்பிகை பெயர் : சுவர்ணாம்பிகை. கண்ணுவமகரிஷி பூசித்த தலம். சூரியன் வழிபட்ட தலமாதலின் ஞாயிறு என்று இத் தலத்திற்குப் பெயர் ஏற்பட்டது. பூமியிலிருந்து கிடைத்த சங்கிலியார் திருவுருவம் அம்பாள் சந்நிதியில் இருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பெரியபுராணத் தில் சுந்தரர் வரலாற்றில் சங்கிலியார் திருவவதாரம் தொடங்கி திருமணம் வரையுள்ள திருப்பாடல்களை ஓதச்செய்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., சென்னை டிப்டிகமிஷனர் திரு. சிதம்பரம் முதலியவர்களுடன் 9—12—63 அன்று இத்தலத்திற்கு எழுந்தருளினார்கள். சங்கிலியார் திருவவதாரம் செய்த இடம் இங்கு இருக்கிறது. அவ்விடத்தில் ஒரு ஆலயம் எழுப்பவேண்டுமென்ற திட்டம் உருவாயிற்று.

திருவான்மியூர் :

வன்மீகமுனிவர் வழிபட்டதலம் வான்மியூர். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட சிறப்புடையது. சுவாமிபெயர் மருந்தீசர். அம்பிகை பெயர் - சொக்கநாயகி. " திருவான்மியூர் உறையும் அரையா உன்னையல்லா லடையாதெனை தாதரவே" எனச் சம்பந்தரும், மலர் தூவி வலம் செயின் வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே" என அப்பரும் போற்றிப் பாடிய தலம். இங்குள்ள பெருமான்மீது பசுவின் குளம்பு சுவடும் பால்பீர் விழுந்த அடையாளமாக வெள்ளை நிற நேர் கோடுகளும் காணப் படுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இத் தலத்திற்கு எழுந்தருளி தலப்பதிகங்களை ஓதச்செய்து வழிபட்டருளினார்கள்.

வடதிருமுல்லைவாயில் :

" தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்டருளிய இறைவன் " என்று சுந்தரர் போற்றிப்பாடிய திருத்தலம் திருமுல்லைவாயில். சுவாமி பெயர் ; மாசிலாமணியீசர். அம்பிகை பெயர் : கொடியிடைநாயகி.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இத் தலத்திற்கு எழுந்தருளித் தலத் திருப்பதிகத்தை ஓதச்செய்து வில்வார்ச்சனை செய்து சிறப்பு வழிபாடு செய்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுடன் சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர், திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., துணை ஆணையர் திரு. சிதம்பரம்,

தஞ்சை துணை ஆணையர் திரு. மார்க்கண்டவேல்ராஜன், திருமதி. சௌந்தரா கைலாசம் முதலியவர்களும் உடன்வந்து தரிசித்து மகிழ்ந்தனர்.

திருமயிலாப்பூர் :

பார்வதிதேவி மயிலாயிருந்து வழிபட்ட தலம். வாயிலார் நாயனார் திருவவதாரம் செய்ததும் திருஞானசம்பந்தர் எலும்பைப் பூம்பாவையாக்கிய அற்புதம் நிகழ்ந்ததுமாகிய சிறப்புக்களை உடையது. சுவாமி பெயர் - கபாலீசுரர். அம்பிகை பெயர் - கற்பகவல்லியம்மை.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னைக்கு எழுந்தருளியபோது இத் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு செய்தருளினார்கள்.

சமயப்பிரசாரகர் பயிற்சிக் கூடத்திற்கு எழுந்தருளி அருளுரை வழங்கியருளினார்கள். அருளுரையை இவ்விதழின் முற்பகுதியில் காணலாம்.

திருக்குளவிநாயகர் :

சென்னையிலிருந்து தருமைக்கு எழுந்தருளும் வழியில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பாண்டியில் உள்ள திருக்குள விநாயகர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி விநாயகர் வழிபாடாற்றினார்கள்.

வடுகூர் :

அடுத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வடுகூர் என்ற தலத்திற்கு எழுந்தருளினார்கள். வைரவர் பூசித்த தலம் இது. ' கடுகூர் பசி காமம் கவலை பிணி இல்லார் வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூர் அடிகளே '' என்பது தேவாரம். இத் தலத்திற்குச் சம்பந்தர் திருப்பதிகம் ஒன்று உள்ளது. இது பாண்டிச்சேரியிலிருந்து விழுப்புரம் பாதையில் 15 கல் தொலைவில் உள்ளது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இத் தலங்களைத் தரிசித்துக்கொண்டு தருமைக்கு எழுந்தருளும்போது, பாண்டிச்சேரி முதலமைச்சர் கனம் திரு. வேங்கடசுப்பா ரெட்டியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து ஆசிபெற்றார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur

I had the fortune and pleasure of worshipping at the Tirukadayur temple with my family to-day.

We enjoyed the worship of Lord Shiva and Devi Abirami. The serene and holy atmosphere at the temple will make even a sceptic very religious minded. The temple is maintained and administered in an admirable manner.

We pray that this high standard will be continued in the future too.

(Sd.) Arul Thyagarajan,
4—1—1967. Senior Programme Executive
Radio Cylon.

What a glorious fortune for myself and family to visit this famous and historic temple at Tirukkadayur, where Lord Amirthakateswarar and Devi Abirami are the principal deities. It is indeed a pleasure and privilege to go round such a nice temple well maintained by the Dharmapuram Adhinam Authorities. It is but fitting that this temple should get FIRST PRIZE as the best maintained temple among the several temples in Trichy and Tanjore Districts. May the temple continue to be maintained in its best form attracting, pilgrims from all over India, and rendering succour and relief to the needy.

I am particularly grateful for the Dharmapuram Adhinam authorities at Tirukkadayur, for conducting me and my family members around and explaining in details the significance of the several aspects, Puranic and Historic love of the Temple.

(Sd.) V. Ramanathan,
Examiner L. F. A/cs. &
Dy. Secretary to Govt. Finance
Madras - 1.

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். K, இராமகிருஷ்ணன்

,, தெய்வீகமூலிகை துளசி ,,

திருத்துழாய் என வழங்கப்பெறும் துளசியைப் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் பயிரிட்டு அதிகமாக உபயோகிக்கிறார்கள். தமிழ், தெலுங்கு, வடமொழி, ஹிந்தி, ஆகிய மொழிகளில் துளசி என்றே வழங்கப்படுகிறது. லத்தீன் பாஷையில் ஓசிமம் (Ocimum Sanctum, Ocimum Alban) என்றும் ஆங்கிலத்தில் (Holy basil) என்றும், வழங்கப்படுகிறது. வைணவர்கள் திருத் துழாய் என்றும் கூறுகின்றார்கள்.

துளசி இலைக்கு உஷ்ணகாரி, சுவேதகாரி, கபகாரி ஆகிய குணங்கள் உண்டு. விதைக்கு சினிந்தக்காரி குணம் உண்டு. இதன் சுவைக்கு கார்ப்பு, வீரியம், வெப்பம் உண்டு. துளசியில் பலவகை நம் நாட்டில் கிடைக்கின்றன. அவையாவன கரியமால் துளசி; கருந்துளசி, கற்பூரத்துளசி, செந்துளசி, காட்டுத் துளசி, சிவதுளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, பெருந்துளசி, கல் துளசி, முள்துளசி என்பனவாம்.

நித்தியப்படி நம் உணவில் ஏற்படக்கூடிய விஷத்தன்மையை நீக்கும் குணமும், தேகத்தை நோய் அணுகாதிருக்கும்படி செய்யக்கூடிய குணமுமுள்ள மூலிகையாகும். இதன் தத்து வத்தை அறிந்துதான் நம் முன்னோர்கள் இதை ஒரு சமய சஞ்சீவியாகப் போற்றி வந்திருக்கிறார்கள்.

பொதுவாகத் துளசியைக் கபம், வயிற்றுளைச்சல், அஸ்திசுரம், தாகம், கபமாந்தம், அரோசகம், பிரமேகம் முதலிய நோய் களுக்கு உபயோகிக்கின்றார்கள். இருமல், இரைப்பு, சேர்வதால் உண்டாகும் கொறு, கொறு என்ற சப்தம், மார்புச்சளி, சன்னி, பாத சுரம் இவைகளை நீக்கி வெப்பத்தைத் தரும். கபத்தையும் வாதத்தையும் குறைத்துப் பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

கீழ்க்கண்ட முறை சரபேந்திர வைத்திய முறைகளில் காணப்படுகின்றது. அதாவது பொரித்த பெருங்காயம் ஐந்து விராகனிடை, துளசி சமூலம் இடித்த தூள் ஐந்து விராகனிடை இவ்விரண்டையும், கலந்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு

ஒன்றேகால் விராகனிடை வீதம் தினம் இருவேளையும் வெந்நீருடன் சாப்பிட வேண்டும். துவரை, மிளகு ரசம் சாப்பிட வேண்டும். பிறகு பத்து நாட்களுக்குத் தினம் ஒரு வேளை மட்டும் சாப்பிட்டால்போதும், எட்டுவித குன்மங்களுக்கும் (வயிற்றுவலிக்கும்) நன்மையைத்தரும்.

இதன் விதையைக் குளிர்ந்த தண்ணீரில் ஊரவைத்து அரைத்துப் பிரசவித்த பிறகு காணுகிற வேதனைக்கு வயிற்றில் பற்றுப்போடலாம். வயிற்றினுள் காற்றுப் புகாமல் கருப்பப்பை சீக்கிரம் சுருங்கும்; கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்தும்.

குழந்தை வாந்தி எடுத்தால் துளசிச் சாற்றில் சுத்தமான தேனைக் கலந்து வைத்துக்கொண்டு அரைத் தேக்கரண்டிவீதம் மணிக்கு ஒரு கரண்டி கொடுத்து வந்தால் வாந்தி நிற்கும்.

வாந்தியுடன் பேதியுமானால், குழந்தைக்கு மாந்தம் வந்து விட்டது என்பார்கள். இதற்குக் கடையில் கிடைக்கக்கூடிய துளசி விதையை வாங்கி நன்றாக அறைத்துப் பசும்பால் அல்லது தாய்ப்பாலில் கலந்து ஒரு சங்கு வீதம் கொடுக்க உடனே வாந்தியும், பேதியும் நிற்கும்.

முற்றின துளசியிலை, நொச்சி இலை, நுணா இலை, பொடுதலை இலை, உத்தாமணி இலை, சங்க இலை, வேப்பிலைக் கொழுந்து ஆகியவைகளைச் சமமாக எடுத்துக் கசக்கிய சாற்றை மூன்று நாட்கள் காலை மாலை ஒரு தேக்கரண்டி வீதம் கொடுத்தால் கணை மாந்தம், மூக்கு மாந்தம், அள்ளுமாந்தம், ஆகிய மாந்தங்கள் எட்டும் நிச்சயம் குணமாகும். மேற்படி மூலிகைகளுடன் சிறிது உரித்த பூண்டும், வறுத்த மிளகும், சுட்ட வசம்பும், சேர்த்து நன்றாக அறைத்துச் சிறு, சிறு உருண்டைகளாகக் காயவைத்து வேண்டும்போது உபயோகிக்கலாம்.

பலமான மார்புச்சளி பிடித்துக்கொண்டு மூச்சுவிட முடியாமல் தவிக்கும் குழந்தைகளுக்குத் துளசி இலைச்சாறும் குப்பைமேனிச்சாறும் எட்டுத்துளிகள் வீதம் தேனுடன் கலந்து கொடுத்தால் ஐந்து நிமிடங்களில் சளி வெளிபட்டுக் குழந்தை சுகமாகத் தூங்கும். பெரியவர்கட்கும் வரக்கூடிய டிப்தீரியா (Diptheria) என்ற சளி அடைப்பான் வியாதிக்கும் மேற்சொன்ன முறையில் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால், நல்ல பலனைக்கொடுக்கும். கோரோசனை கொஞ்சம் சேர்ப்பது நல்லது.

தாய்ப்பால் சரிவரக குடிக்காத குழந்தைகளுக்குத் துளசி அதிமதுரம் இரண்டையும் வெந்நீரில் சந்தனம்போல் நன்றாக

அரைத்து முலைக்காம்பில் தடவிப் பால் குடிக்கச் செய்தால் கல்லீரல் நன்ருக வேலை செய்யும், குழந்தைகளுக்கு நல்ல பசி உண்டாகும். இரண்டு அவுன்ஸ் துளசிச் சாற்றில் தேன் கலந்து காலையில் சாப்பிட்டு வந்தால் சீதள சுரம் (Influenza) மலேச்சுரம் முதலிய தொற்று நோய்கள் நீங்கும். மேலும் நடுத்தர வயதுடையவர்கள், காலை, மாலை, ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால் அரிப்புப் போன்ற சர்மரோகத்திற்குச் சிறந்த மருந்தாகும்.

பாம்பு விஷத்திற்கும் கிராமங்களில் துளசிச் சாற்றைக் கொடுக்கும் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது. தொடர்ந்து பத்து நிமிஷத்திற்கு ஒருதரம் கொடுத்து வந்தால் விஷம் முறியும். பயம், அதிர்ச்சியினுல் திடீரென்று மயங்கி விழுந்து பிரக்ஞையற்றுக் கிடப்பவருக்கு ஒரு அவுன்ஸ் துளசிச் சாற்றைக் கொடுத்தால் உடனே மயக்கம் தெளியும்.

இதனுல்தான் ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் துளசி மாடம் வைத்துத் தெய்வீக மூலிகையாகக் கொண்டாடுகிருர்கள். பெண்களுக்குப் பெரும்பாலும் மாத விலக்குச் சரிவர இல்லை யென்ருல் அதனுல் ஏற்படக்கூடிய தலைவலி, முதுகுவலி, இடுப்பு வலி, துடைவலி, மார்புவலி இவைகளுக்குத் துளசியுடன் கால் பலம் வாய்விளங்கம், சுக்கு, கருஞ்சீரகம், கண்டத்திப்பிலி, பறங்கிப்பட்டை இவைகளைச் சேர்த்துக் கஷாயமாகவோ, சூரணமாகவோ சாப்பிட்டுவந்தால் மேற்சொன்ன வியாதிகள் நீங்கும். உடலுக்கு நல்ல ஆரோக்கியம்.

துளசி சமூலம் நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து சம அளவு மிளகுப்பொடி சேர்த்து ஒரு தேக்கரண்டி வீதம் நெய்யில் சாப்பிடலாம். அல்லது கொஞ்சம் சீரகம், துவரம் பருப்பு இவைகளை வறுத்த பொடியுடன் உப்பும் கலந்து முன் சூரணத்துடன் சேர்த்துச் சாதத்துடனும் சாப்பிடலாம். நல்ல பசியை உண்டாக்கும். வாய்வு ரோகங்கள் நீங்கும்.

துளசி காபி :- கப சம்பந்தமான ரோகமுடையவர்கள், இதை உபயோகிக்கலாம். அமுக்கிருன்கிழங்கு, பறங்கிப்பட்டை, சுக்கு, ஆவாரம்பூ, ஏலரிசி, சித்தரத்தை, அதிமதுரம் இவைகளில், ஏலரிசி சித்தரத்தை மாத்திரம் லேசாகவறுத்து எல்லா வற்றையும் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்குப் பலம் ஒன்று, துளசி இலைச் சூரணம் பலம் ஐந்து, இவை யாவையும் கலந்து வைத்துக்கொண்டு, ஒரு ஆழாக்குத் தண்ணீரில் இரண்டு கரண்டியளவு தூள் போட்டுக் கொதிக்க வைத்து வடி கட்டிப் பால் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

இரத்தம் சுத்தியாகும் கபம் அறவே நீங்கிவிடும், நுரையீரல் பலப்படும்.

கண்ணெரிச்சல், அதிக உஷ்ணம் இவைகளுக்கு :- நல்லெண்ணெ பதினைந்து பங்கு, துளசிச் சாறு ஆறு பங்கு, எலுமிச்சம் பழச்சாறு இருபது பங்கு இவைகளை ஒருமிக்கக் கலந்து, அரைப்பலம் சித்தரத்தை, மிளகு, அதிமதுரம் இவைகளை இடித்த சூரணங்களைக் கலந்து காய்ச்சி வடித்து வாரம் ஒரு முறை ஸ்நானம் செய்ய உஷ்ணத்தினால் ஏற்பட்ட, நீடித்த கண் எரிச்சல், கண் சிவப்பு நீங்கிக் குளிர்ச்சி உண்டாகும்.

சர்பத் :- துளசி இலைச் சாறு ஒரு பங்கு, எலுமிச்சம் பழச் சாறு ஒரு பங்கு, சீனுக்கற்கண்டு ஒரு பங்கு, தேன் ஒரு பங்கு இவைகளை சர்பத் பாகப்படி காய்ச்சி வேளை ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் இருதயத்திற்கும், இரைப்பைக்கும் பலத்தைக் கொடுக்கும். இருமல், இறைப்பு, சுரம் முதலியவைகள் நீங்கும்.

வைத்தியசாலையில் டிசம்பர் மாதம் சிகிச்சை பெற்றவர்கள் விபரம் :-

ஆண்கள்	932
பெண்கள்	872
குழந்தைகள்	864
	2668

வைத்தியக் குறிப்பு.

எனக்குச் சென்ற மூன்று ஆண்டுகளாக கடவாய்ப் பல்லிலிருந்து கண், புருவம், நெற்றி பூராவும் அடிக்கடி தாங்க முடியாத வலி இருந்துவந்தது. சாப்பிடும்போது மிகவும் கஷ்டம். எப்போது வரும் என்று சொல்லமுடியாது. இதற்கு Trigeminal Neuralgia in the Distribution of oputhal Mic. Division) என்று டாக்டர்கள் பெயரிடுகிறார்கள். அனேக நூற்றுக்கு மேற்பட்ட ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களையும் ஆலோசனை கலந்து அவர்கள் கூறிய ஆலோசனையின்படி நூற்றுக்கணக்கான இன்ஜக்ஷன்களும் மருந்துகளும் உபயோகித்தும் பயனில்லை. இந்த வியாதிக்கு எங்குமே மருந்து இல்லை என்று கூறிவிட்டார்கள்.

நான் ஞானசம்பந்தத்தைப் படித்து எனக்குள்ள வியாதியைப் போல் மற்றொருவருக்குக் குணப்படுத்தியதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தேன். 16—12—66 மாலை சித்தவைத்திய சாலை டாக்டர்

கே. இராமகிருஷ்ணன் அவர்களை சந்தித்து ஆலோசனை செய்த தில் எனக்கு நான்கு நாட்கள் இங்கேயே தங்கச்சொல்லி 9 டோஸ் பற்பம் கொடுத்தார்கள். நான் ஸ்ரீ முருகப்பெருமானை பிரார்த்தனை செய்துகொண்டு அருந்தினேன். மூன்று வருட மாக என்னை வருத்திய நோய் குணம் ஆயிற்று. ஆனாலும் இன்னும் ஒருமாதம் மருந்தும் அருந்தவேண்டும். தைல ஸ்நானமும் செய்யச்சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

வியாதிகளைத் தீர்க்க ஸ்ரீ வைத்தியநாதசுவாமி சக்தியளித்து நமக்கு டாக்டர் கே. இராமகிருஷ்ணன் அவர்களைக் கொடுத் துள்ளார்கள் என்றே நான் நினைக்கிறேன். இங்கே சுமார் 150க்கு மேற்பட்ட வியாதியஸ்தர்களையும் தினம் குணப் படுத்து கிறார்கள் என்பதை நேரில் கண்டறிந்தேன்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கருணையால் நடை பெறும் இந்த வைத்தியசாலைக்கு மேன்மேலும் கீர்த்தியும், புகழும் கிடைக்கவேண்டுமென்றும் அடிக்கடி மகாசந்நிதானம் விஜயம் செய்யவேண்டும் என்றும் வணங்கி அவர்கள் பொற்பாத திருவடி களில் நமஸ்காரங்களை சமர்ப்பித்துக்கொண்டு இறைஞ்சு கிறேன்.

(Rd) Dr. A. G. Gomathi Ammal,
(L. M. P. 2402 Regd)
ஸ்ரீ குமரகுருபரன் வைத்திய இல்லம்,
திருவனந்தபுரம் ரோடு.
பாளையம்கோட்டை, (திருநெல்வேலி.)

பார்வையாளர் குறிப்பு.

ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

அன்று அபிராமபட்டருக்கு அருள்புரிந்த தேவியை, மார்க் கண்டருக்கு அருள்புரிந்த அமிர்தகடேஸ்வரரை கண்ட கண் ணும் மனமும் களிக்க கண்டு இன்புற்றோம். கண்கொள்ளாக் காக்ஷி. கருத்துவிட்டு அகலாத தரிசன இன்பம். மகத்தான மெய்ப்பாடு அடைந்தோம்.

(Sd.) L. கிருஷ்ணய்யர்
&
சிவானந்த விஜயலக்ஷ்மி.

8—1—67.

செய்திகள்

தருமையாதீனத் திருக்கோயில்களில்

பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் திருக்கோயில்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆணையின் வண்ணம் பாவை மாநாடுகள் நடைபெற்றன. பாவை மாநாட்டில் அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு பாவைப் பாடல்களின் அரிய கருத்துக்களை விளக்கினார்கள். அன்பர்கள் பலர் ஆங்காங்கும் கேட்டு மகிழ்ந்தனர். மாநாடுகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. மாநாட்டின்போது பாவைப்பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

திருமுல்லைவாசல் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி தேவஸ்தானத்தில் 24—12—66 சனிக்கிழமை திருவெம்பாவையும், திருப்பாவையும் என்ற தலைப்பிலும், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 25—12—66 ஞாயிற்றுக்கிழமையன்று பாவைப்பயன் என்ற தலைப்பிலும் சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. சேது சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

தலைஞாயிறு ஸ்ரீ குற்றம் பொறுத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் 24—12—66 சனிக்கிழமையன்று பாவைப் பயன் என்ற தலைப்பிலும், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 26—12—66 ஞாயிற்றுக்கிழமையன்று பாவை நோன்பு என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருநெறிச்செம்மல் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

24—12—66 சனிக்கிழமை திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திருவெம்பாவை என்ற தலைப்பிலும் கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரிசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பாவைப்பயன் என்ற தலைப்பிலும் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், சிரோமணி திரு. வி, சபேசன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார்சுவாமி தேவஸ்தானத்தில் 24—12—66 சனிக்கிழமை திருக்கருகாவூர், சமயப் பிரசாரகரும் தொண்டருமாகிய சிவஞானம் என்னும் திரு. கோ. மருள் நீக்கியார் அவர்களால் பாவைச் சிறப்பு என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

25—12—66 ஞாயிற்றுக்கிழமையன்று குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திருவையாறு செய்தியாளரும் சமயப்பிரசாரகருமான திரு. ஜி. தனவேல் பிள்ளை அவர்கள் பாவைநெறி என்ற தலைப்பிலும், திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப்புலவர், மகாவித்துவான், சித்தாந்தக் கலைமணி திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் பாவைச் சிறப்பு என்ற தலைப்பிலும், உய்யக்கொண்டான் ஸ்ரீஉஜ்ஜீவநாதசுவாமி தேவஸ்தானத்தில், திருச்சி வித்துவான் திரு. பட்டுசாமி ஓதுவார் அவர்கள் பாவைப் பயன் என்ற தலைப்பிலும் காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்முரிநாதசுவாமி தேவஸ்தானத்தில் நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப்புலவர் வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் திருவெம்பாவையும் திருப்பாவையும் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

26—12—66 திங்கட்கிழமை மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி ஆலயத்தில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனார் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவு பாவை நோன்பு என்ற தலைப்பில் நிகழ்ந்தது.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினரின்

சோழநாட்டுக் காவிரித் தென்கரை கிழக்குப் பகுதித் தலயாத்திரை

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர் அறுபதின்மர் ஒரு பஸ் மூலம் 23—12—66 முதல் 29—12—66 முடிய ஒருவார காலம் சோழ நாட்டில் காவிரித் தென்கரையில் பாடல் பெற்ற 127 தலங்களுள் கிழக்குப் பகுதியில் உள்ள 25 தலங்களையும், வடகரையில் உள்ள திருப்பனந்தாள், திருவைகாவூர், திருவிசயமங்கை முதலிய தலங்களையும், வரலாற்றுச் சிறப்பு மிக்க திருபுவனம், தேரழுந்தூர்

ஆமருவியப்பர், கம்பர்மேடு முதலியவற்றையும் வழிபட்டு ஆங்காங்கும் சமயப் பிரசாரமும் நிகழ்த்தினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் தங்கள் தங்கள் அருளாட்சியில் உள்ள திருக்கோயில்களில் வழிபாட்டிற்கும், சமயப் பிரசாரத்திற்கும், உண்டி உறையுளுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்வித்தருளினார்கள். சென்னைமாநில இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர், திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்களும் எல்லாத் தலங்களுக்கும் சுற்றறிக்கைவிடுத்து வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள். சென்னைத் துணை ஆணையர் திரு. A. சிதம்பரம் பிள்ளை B. A., B. L., அவர்களும், தருமையாதினப்புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்களும், 23—12—66 விடியற்காலையே நிலையத்திற்கு வந்து வழிபாட்டுக் குழுவினரை வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்கள்.

23—12—66 இல் திருவாரூர் ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் திருக்கோயில், ஸ்ரீ பசுபதீசுவரர் திருக்கோயில், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயில், ஸ்ரீ காசி மடாலயம், திருவிசயமங்கை ஸ்ரீ விசயநாதர் திருக்கோயில், திருவைகாவூர் ஸ்ரீ வில்வவனநாதர் திருக்கோயில் திருநாகேச்சரம் ஸ்ரீ சண்பகாரண்யர் திருக்கோயில் ஆகியவற்றில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. திருவாமூரில் ஆலய நிர்வாக அறங்காவலர் திரு. R. நாராயண ரெட்டியார், திரு. A. இராமமூர்த்தி ரெட்டியார் முதலியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்திவைத்து தேனீர், பால், மோர் அருத்தி உபசரித்தார்கள். திருப்பனந்தாளில் தருமையாதீன உத்தரவுப்படி தேவஸ்தான மேற்பார்வையாளரும், திரு. சுந்தரேசம் பிள்ளையும் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நிகழ்த்திவைத்து, மாகேஸ்வரபூசையும் நன்கு நடத்தி உபசரித்தார்கள். பிறகு திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளைக் குழுவினர் தரிசித்தனர். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் சிவ தல யாத்திரையில் வரும் நன்மைகளையும், ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பதையும் விளக்கி அருளாசி வழங்கினார்கள். விசயமங்கையில் தேவஸ்தான சிவாசாரியார் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திக்கொடுத்தார்கள். திருவைகாவூரில் நிர்வாக அறங்காவலரின் உறவினரும், சிவாசாரியார், ஊர்ப் பொதுமக்களும்

குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். ஊர்ப்பொதுமக்கள் ஊக்கத்தோடு வழிபாட்டில் கலந்து கொண்டனர். திருநாகேச்சுரத்தில் நிர்வாக அதிகாரி, திரு. தங்கவேல் பிள்ளை அவர்கள் காலங்கடந்ததையும் பொருட்படுத்தாது இரவு 11-30 மணிக்குக் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்துப் பிரசாதங்களும் அளித்து உபசரித்தார்கள். குழுவினர் இரவு 1-30 மணிக்குத் திருபுவனம் சேர்ந்து சிற்றுண்டி அருந்தி ஓய்வு பெற்றனர்.

24—12—66 இல் திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரர் திருக்கோயில், திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருத்தென்குரங்காடுதுறை ஸ்ரீ ஆபத்சகாயேசுரர் திருக்கோயில், திருவைகல்மாடக்கோயில், திருநல்லம் (கோனேரிராஜபுரம்) ஸ்ரீ உமாமகேசுவரர் திருக்கோயில், திருநீலக்குடி ஸ்ரீ நீலக்குடி ஈசர் திருக்கோயில் ஆகியவற்றில் வழிபாடும் சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. திருபுவனத்தில் தருமையாதீனம் உத்தரவுப்படி திரு. சொக்கு முதலியார் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்புறநடத்திவைத்துச் சிற்றுண்டிகள் அளித்து உபசரித்தார்கள். திருவிடைமருதூரிலும், திருநீலக்குடியிலும், திருவாவடுதுறை ஆதீன உத்தரவுப்படி மேற்பார்வையாளரும், ஷராப் திரு. சௌந்தரராஜ பிள்ளையும் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்துச் சிற்றுண்டிகளும், பிரசாதங்களும் அளித்து உபசரித்தனர். திருத்தென்குரங்காடுதுறை (ஆடுதுறை) யில் ஸ்ரீ அப்பர் அருள்நெறி வார வழிபாட்டுக் கழக அன்பர்களும், செயலாளர் திரு. வயித்தியலிங்கம் செட்டியாரும் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் நன்கு நடத்திவைத்துக் குழுவினருக்கு மாகேஸ்வரபூசையும் நிகழ்த்திவைத்து உபசரித்தார்கள். திருவைகலில் பிரமன் பூசித்த கோயில், திருமால் பூசித்த கோயில், மகாலக்ஷ்மி பூசித்த மாடக் கோயில் ஆகிய மூன்று ஆலயங்களிலும் சிவாசாரியரும், ஊர்ப்பொதுமக்களும் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். திருநல்லம் (கோனேரிராஜபுரத்தில்) சிவாசாரியர்களும், அறங்காவலரின் பிரதிநிதிகளும் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நிகழ்த்திக் கொடுத்தனர்.

(தொடரும்)

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(பராபவ௵ தை௴ 1௳ முதல் 30௳ முடிய)

(14—1—67 முதல் 12—2—67 முடிய)

மகர சங்கிராந்தி புண்ணிய காலம். ஸ்ரீ சர்வேச்வரன் ஸ்ரீ சர்வேச்வரியினுடைய திருவருளால் நாளது பராபவ வருஷம் தை மாதம் முதல் தேதி ஸ்திரவாரத்தில் உதயாதி 14 நாழிகை, 42 வினாடியளவில் மேஷ லக்னத்தில் திருமூர்த்தி ஸ்வரூபியாகிய ஸ்ரீ சூர்ய பகவான் உத்திராயண புண்ணிய காலத்தில் மகரராசியில் பிரவேசம் செய்வதால் நாடெங்கும் செழித்து தனதான்ய சமிருத்தியுடனும் சுபிக்ஷத்துடனும் சகல பிரஜைகளும் சந்தோஷகரமாகப் பொங்கலிட்டு நிவேதனம்செய்து பொங்கலோ பொங்கல் என்று வாழ்த்திக்கொண்டு சந்தோஷம் அடைய ஸ்ரீ சூர்ய பகவான் அருள்புரிவாராக. (பொங்கலோ பொங்கல்).

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுப சந்தோஷங்களைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். நஷ்டதன வரத்தும் தான்யப் பெருக்கும் ஏற்படச் செய்யும். அடிக்கடி சஞ்சாரபலன் உண்டு பண்ணும். ஈதிபாதைகளால் மத்யகாலங்களில் சொர்ப்ப உபாதியை உண்டுபண்ணும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தனதான்ய சமிருத்தியும் ஏற்படச்செய்யும். இடம்மாறி உத்தியோக லாபம் உண்டு பண்ணும். செலவினங்கள் அதிகமாகும். ஆரோக்யம் உண்டாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் விசேஷ லாபத்தையும் இல்லற சுகத்தையும் உண்டுபண்ணும். திருவாதிரை நான்கு பாதங்கள் ஆரோக்யத்தைத் தரும். தொழில் நிமித்தமாய் அடிக்கடி

சஞ்சாரம் உண்டுபண்ணும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும், எதிர்பாராத தூர யாத்திரையையும், உத்தியோக உயர்வையும், கிரக சுகத்தையும், நஷ்டதன பிராப்தியையும் ஏற்படச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வெகுநாட்களாய் தீராத விவகாரம் ஜெயிக்கும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளால் மேன்மை உண்டாகும். எங்கும் கீர்த்தி ஏற்படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச்செய்யும். தெய்வபலம் முன்னின்று காக்கும். தொழில் ஓங்கும். தனதான்ய சமிருத்தி ஏற்படும். அடிக்கடி புத்தி சலனமும், சஞ்சார பலனும் ஏற்படச் செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் விசேஷ நன்மைகளைத்தரும். சுபசோபனாதிகள் மூலமாயும், தர்ம மூலமாயும் விசேஷ செலவினங்கள் உண்டுபண்ணும். தனதான்யப்பெருக்கு ஏற்படச் செய்யும்; நூதனமாக ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். தெய்வபலம் முன்னிற்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும், வரவு செலவு சமனாகும். வீண் செலவுகளும், வைத்தியச் செலவுகளும் ஏற்படும். ஆனாலும் தொழில் ஓங்கும் நஷ்டமான பொருள் வந்து சேரும். தனதான்யம் சமிருத்தியாகும். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் நன்மையே உண்டுபண்ணும். விவாகாதி சுபசோபனாதிகளும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வாங்குதலும், நூதன கிரகவாசமும், உத்தியோக உயர்வும் இல்லற சுகமும் ஏற்படச்செய்யும். வெள்ளி, சனி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனையே தரும். தொல்லைகள் அதிகமாகும்; வீண் அலைச்சல்களும், தொழில் நஷ்டமும், தனதான்யக் குறைவும் ஏற்படச்செய்யும. ரொம்பவும் பிரயாசையோடு சகல காரியங்களும் சாதிக்கும்படி ஆகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் பூராவாக சுபபலனையே தரும். இல்லறம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும், கீர்த்தி பத்திரம் கிடைக்கச்செய்யும். உத்தியோகம் உயர்வாகும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். சுபிக்ஷம் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும் அடிக்கடி சஞ்சார பலனும், இல்லறத் தொல்லைகளும், வீண் செலவுகளும் அதிகமாகும். சகல காரியங்களும் நினைத்தபடி நடக்காது. எல்லாக் காரியங்களும் உதவியால்தான் சாதிக்க முடியும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் நஷ்டமான சொத்துக்களைத் தரும். விவகாரம் ஜெயிக்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தொழில் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மகாஜனங்களுக்கு வேண்டுகோள். சென்ற மாதம் சொன்னதுபோலத்தான் எதிர்காலத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி தெய்வ பலம் இல்லாமல் உலகில் ஒன்றும் செய்துகொள்ள முடியாது. உலகில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படச்செய்யும். நடுத்தர வகுப்பார்கள் ரொம்பவும் சிரமப் படுவார்கள். அவர்கள் எவ்வளவு சிரமத்தை அடைந்தாலும், அவர்களால்தான் உலக சுபிக்ஷத்தை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். இதர உத்பாதங்கள் வராமல். தடுத்துக்கொள்ள வேண்டும். ரொம்பவும் சாந்தமான சித்தர்களாய் சதா தெய்வ சிந்தனையாகவே இருந்துகொண்டு தனக்கும் உலகத்துக்கும் க்ஷேமம் உண்டாகும்படியான தெய்வீக காரியங்களைச் செய்து கொண்டேவர கடவுள் காப்பார், சுபம் உண்டாகும்.